GOKULAM

கோகுலம்

டிசம்பர் 2005 ❖ ரூ.6/- ❖ 96 பக்கங்கள்

குழந்தைகளின் குதூகலம்!




ஆறு அற்புத சுவைகளில். . .
Tasty ! Tasty !!
MILKA
WONDER CAKE
சுவையுடனே – ஆரோக்கியம்
அனைவருக்கும்...
NEW
WONDER
Premium
SWEET BREAD
Rs.10.00
நியூ
வொண்டர் ப்ரெட்

கோகுலம்

(கல்கி நிறுவன வெளியீடு)

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32

முதன்மை உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22251522 / 22250623
22251324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :


ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
வெளிநாடு
(விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யுஎஸ். டாலர்
இலங்கை - ரூ.400/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!





டிசம்பர் 2008 ❖ மலர் : 23 ❖ இதழ் : 11

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

- பாரதியார்

அன்புள்ள உங்களுக்கு...





ஹாய் ஃபிரெண்ட்ஸ்!

தீபாவளி, பெருமழை போன்றவற்றைக் கடந்து பள்ளிக்குச் சென்றுக்கொண்டிருப்பீர்கள். அடுத்து அரையாண்டுத் தேர்வு வர இருக்கிறது. இந்தத் தேர்வு மிக முக்கியமானது என்பது உங்களுக்குத் தெரியும். இந்த அரையாண்டுத் தேர்வை நன்றாகச் செய்தால் ஆண்டுத் தேர்வை சுலபமாக எதிர் கொள்ள முடியும்.

சுழல் கோப்பை!

கோகுலம் கருத்துப் படிவம் அனுப்பியவர்களில் 25 பேருக்கான பரிசு பட்டியலை வெளியிட்டிருக்கிறோம். உங்கள் ஒவ்வொருவரின் கருத்துகளையும் கவனமுடன் கையாண்டு கோகுலத்தைச் செழுமை படுத்த பயன்படுத்திக் கொள்வோம்.



வழக்கம் போலவே இந்த ஆண்டும் சுழல் கோப்பை போட்டி சுவாரசியமாக நடந்து கொண்டிருக்கிறது. அடுத்த இதழில் எந்தப் பள்ளிக்கு சுழல் கோப்பை கிடைத்திருக்கிறது என்பது தெரிந்துவிடும். எல்லோரும் கோப்பையை வென்ற பள்ளிக்கு வாழ்த்துச் சொல்லத் தயாராகுங்கள்.

சென்ற இதழ் தீபாவளி சிறப்பிதழ் போலவே இந்த இதழ் கிறிஸ்துமஸ் சிறப்பிதழாக வெளிவந்திருக்கிறது. படித்து விட்டு உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள்.

அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துகள்!

அன்புடன்
உங்கள் **கோகு**

பரிசு ஜோக்ஸ்



''சீக்கிரமா, ரெண்டு மசால் வடை குடுங்க..''

''எதுக்கு மசால் வடை, எலியைப் பிடிக்கவா?''

''இல்லீங்க, ரயிலைப் பிடிக் கணும்!''

- ஆர். தங்கராஜ், திருப்பூர்



''டிராவிட்டை எழுப்பறோம்!''

''இரண்டு வீட்டுக்கும் இடை யில் டிராவிட்டை எழுப்பறோம்!''

''என்னது டிராவிட்டா?''

''அவர்தான் இந்தியாவின் தடுப் புச்சுவர்னு சொல்றாங்களேடா!''

- விஜயராகவேந்திரன், சிவகிரி





''டாக்டர் பயப்படும்படியா ஒண்ணும் இல்லையே?''

''என்னோட 'ஃபீஸ்' இருக் குதே!''

- ஆர். சரவணக்குமார், அழகிரி சுரேஷ் அ.உ.நி பள்ளி, ஆலாங்கொம்பு



''பாம்பின் கால் பாம்பறியும்!''

''ஏன்... அது காலர் ஐ.டி வெச் சிருக்கா?''

- எம். பரமேஷ்வரன், பத்தாம் வகுப்பு, ஆலாங்கொம்பு, சிறுமுகை

கொம்பு முளைத்த குதிரை!

எம். மோஹன்தாஸ்




உன் விருப்பப் படியே ஆகட்டும்.
எனக்கு ரொம்ப சந்தோஷம்.
அன்றிலிருந்து குதிரை மற்ற விலங்குகளுக்குத் தொல்லை கொடுக்க ஆரம்பித்தது.
என் வழியில் குறுக்கே வந்தால் தொலைத்து விடுவேன்.
உதவி... உதவி....
விலங்குகள் எல்லாம் சிங்கத்திடம் முறையிட்டன.
குதிரையின் அட்டகாசம் தாங்க முடியவில்லை.
கடவுளிடமே நீங்கள் முறையிடலாமா?
கடவுள் குதிரையிடம் மிகவும் அன்பாக இருக்கிறார்.
இதை ஏதாவது தந்திரம் செய்துதான் அடக்க வேண்டும்.
ஒருநாள் கடவுள் குதிரையில் வந்து கொண்டிருந்தார்.
கடவுளுக்கு குதிரை மீது கோபம் வருமாறு ஏதாவது செய்ய வைக்கணும்.


இந்தக் கிரீடத்தை பத்திரமாக வைத்திரு. நான் வந்து வாங்கிக் கொள்கிறேன்.
கடவுள் கிரீடத்தைக் கொடுத்து விட்டு ஆற்றிற்குச் சென்றார்.
சிறிது நேரத்தில் -
குதிரை அண்ணா என்ன பண்றே?
இந்தக் கிரீடத்தைக் காவல் காக்கறேன்.
இந்தக் கிரீடத்தை உன் கொம்பில் மாட்டினால் மிகவும் அழகாக இருப்பாய்!
அப்படியா! நீயே வைத்து விடு.
சிறிது நேரத்தில் கடவுள் திரும்பினார்.
ஆ... உனக்கு எவ்வளவு தைரியம்? என் கிரீடத்தை மாட்டிக் கொண்டாய்!
இல்லை... அது வந்து...
என்னை அவமானப் படுத்தி விட்டாய். உன் கொம்புகளை இழப்பாய்.
கடவுள் சொன்னவுடன் குதிரையின் கொம்பு மறைந்தது.
தலைக்கனத்தால் கொம்புகளை இழந்தது குதிரை.

செய்தி நேரம்





குடியிருந்த கூடு!

அர்ஜென்டினா நாட்டைச் சேர்ந்த ரோக்சானா போன்ஸ் என்கிற பெண்மணி மர உச்சிக்குச் சென்று இலைகளையும் குச்சிகளையும் வைத்து, பெரிய கூட்டினைக் கட்டி, அதில் ஒரு வருடத்திற்கு வசித்திருக்கிறார். இது எப்படி சாத்தியம் என்று கேட்டால், ''எல்லாம் கூடு கட்டி வசிப்பது எப்படி? என்கிற புத்தகத்தைப் படித்துத்தான்'' என்கிறார் கூலாக. இது எப்படி இருக்கு...?

சென்ற மாதத்தில் நமக்கு ஏற்பட்ட மாபெரும் இழப்பு என்ன தெரியுமா? முன்னாள் ஜனாதிபதி கே.ஆர். நாராயணன் மறைவுதான். மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்து, கடுமையாகப் போராடி, இந்தியாவின் மிகப் பெரிய பதவியான 'குடியரசுத் தலைவர்' பதவிக்கு வந்தவர். பேராசிரியராகவும் பத்திரிகையாளராகவும் பணியாற்றிய இவர் மேல்படிப்புக்கான பணத்தை குழந்தைகளுக்கு 'டியூஷன்' சொல்லிக் கொடுப்பதன் மூலமே பெற்றுக் கொண்டார். இவர் ஜனாதிபதியாக இருந்த போது, பல முக்கிய முடிவுகளை மிகவும் தைரியமாக எடுத்தவர்.

* கே.ஆர். நாராயணன்





* சச்சின்

கிரிக்கெட்டில் தொடர்ந்து சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கும் சச்சின் டெண்டுல்கரின் மணிமகுடத்தில் மேலும் ஒரு வைரக்கல் பதிக்கப்பட இருக்கிறது. உலகிலேயே அதிக ஒருநாள் போட்டிகள் விளையாடிய வீரர் சச்சின் என்பதுதான் அது. வாசிக் அக்ரம்தான் தற்போது அதிக போட்டிகள் (356) விளையாடியவர். சச்சினின் கணக்கு தற்போது 351.

- கலை

சமீபத்தில் ஒரு நிறுவனம் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தியது. அதில் கேட்கப்பட்ட கேள்வி - நீங்கள் கிரிக்கெட்டை ரசிப்பவரா அல்லது சச்சினை ரசிப்பவரா என்பதுதான். கருத்துக்கணிப்பில் பங்கேற்றவர்களுள் பெரும்பாலானோர் கூறிய கருத்து என்ன தெரியுமா? "நாங்கள் சச்சினுக்காகவே கிரிக்கெட்டை அதிகம் நேசிக்கிறோம்." இந்த ஒரு விஷயம் போதும், சச்சின் எந்த அளவிற்கு அனைவரது உள்ளத்தையும் கொள்ளை கொண்டுள்ளார் என்பதற்கு.



ஒருநாள் போட்டி, டெஸ்ட் போட்டி என்று எதுவாக இருந்தாலும் சச்சினின் ஆட்டம் சரவெடியாகத்தான் இருக்கும்.

இந்த ஒலி இப்பொழுதுதான் நீண்ட இடைவெளிக்குப் பிறகு, தீபாவளிப் பட்டாசோடு பட்டாசாகக் கேட்கத் துவங்கியுள்ளது. ஏன்... இத்தனை நாள் சச்சினுக்கு என்னாச்சு...?

சச்சின் கடைசியாக விளையாடியது இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் தேதி பாகிஸ்தானுக்கு எதிராக டெல்லியில் நடந்த ஒருநாள் போட்டியில்தான். இந்த இடைப்பட்ட ஆறுமாத காலகட்டம் அவருக்கும் சரி, இந்திய அணிக்கும் சரி ஒரு சோதனையான காலகட்டமாகவே இருந்தது. சமீபத்தில் டென்னிஸ் எல்போ பிரச்னைக்காக அறுவை சிகிச்சை செய்துகொண்ட சசின் ஆறு மாதங்கள் ஓய்வெடுக்க வேண்டியிருந்தது.

சச்சின் எப்போ வருவார்... எப்படி வருவார் என்று ஒவ்வொரு நாளும் செய்தித்தாள்களையும் தொலைக்காட்சிகளையும் ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர் ரசிகர்கள். இந்த நேரத்தில் சச்சினின் கிரிக்கெட் எதிர்காலம் அவ்வளவுதான் என்றும், இனிமேல் சச்சினை பேட்ஸ்மேனாகப்

இரா. முத்துக்குமார்



பார்க்க வாய்ப்பில்லை, வேண்டுமானால் கிரிக்கெட் பயிற்சியாளராகப் பார்க்கலாம் என்ற ரீதியிலும் கட்டுரைகள்






"ஹையா! சச்சின் வந்தாச்சு!"

வெளி வந்து கொண்டிருந்தன. இவை சச்சினின் கோடானுகோடி ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தன.

இந்தச் சமயத்தில் இந்திய அணியில் இளமைத் துள்ளி விளையாடினாலும்கூட பெரிய அளவில் வெற்றிகளைக் குவிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தது இந்திய அணி. அணியில் ஏற்பட்ட சில தேவையற்ற குழப்பங்களால் திறமையானவராக இருந்தும் அதிக அனுபவம் இல்லாத ராகுல்டிராவிட் கேப்டனாக்கப்பட்டார். இந்த நிலைமையில் அதுவும் ஓரளவிற்கு நல்ல அனுபவசாலியான சௌரவ் கங்குலி அணியில் இடம்



பெறாத நிலையில், இந்திய அணி இக்கட்டில் தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில் ஆபத்பாந்தவனாக மீண்டும் களமிறங்கத் தயாரானார் மாஸ்டர் பிளாஸ்டர் என்றழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர்.

இலங்கைக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் தொடரில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு சச்சின் கலந்து கொண்டதால், கிரிக்கெட் ரசிகர்கள் மனதில் எல்லையில்லாத சந்தோஷம். இந்தத் தொடரில் ஆரம்பத்திலிருந்தே பட்டையைக் கிளப்பினார் சச்சின். அதிரடியாக முதல் போட்டியில் 93 ரன்களையும் அடுத்த போட்டியில் ஆட்டமிழக்காமல் 67 ரன்களையும் பெற்று, இந்திய அணி வெகு நாட்களுக்குப் பிறகு, சொந்த மண்ணில் ஒருநாள் தொடரைக் கைப்பற்ற காரண கர்த்தாவாகி தான் என்றைக்குமே ராஜா தான் என்று நிரூபித்துவிட்டார்.

சச்சினின் இந்தப் புயல் வேக ஆட்டம் அவரது ரசிகர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் நீச்சலடிக்க வைத்துள்ளது. தற்போது அணியில் மூத்தவரான சச்சின் தனது அனுபவத்தைக் கச்சிதமாகப் பயன்படுத்தி அணியை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்கிறார் என்பதற்கு ஒரு உதாரணம்தான் முதல் ஒருநாள் போட்டியில் வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதான் அதிரடி வீரராகக் களமிறக்கப்பட்டது. இந்தச் சமயோசிதத் திட்டம் சச்சினின் மூளையில் உதித்தது என்று மிகுந்த பெருமையுடன் கூறினார் ராகுல் டிராவிட்.

இலங்கைக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் சச்சின் ஆடிய விதம், நம்முடைய சச்சின் மீண்டும் நமக்கு எந்தச் சேதாரமும் இல்லாமல் கிடைத்துவிட்டார் என்பதை உணர்த்தும் வகையில் இருந்தது. அதேசமயம் சச்சினுடைய இந்த அதிரடி வருகை இந்திய அணியின் மீது சமீப காலமாக வீசப்பட்ட விமர்சன பௌன்சர்களை பௌண்டரிக்குத் திருப்பிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

சச்சினின் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தைப் பார்த்து விக்கித்துப் போனார், நமது பயிற்சியாளர் க்ரெக் சேப்பல். சச்சின் தனது வெற்றிகரமான இரண்டாவது இன்னிங்ஸைத் துவக்கி விட்டார் என்று மகிழ்ச்சியில் தனது வயதையும் மறந்து நம்மோடு துள்ளிக் குதிக்கிறார்... ... அத்தோடு சச்சின் தனது ஆற்றலையும் அனுபவத்தையும் தனது அடுத்த தலைமுறைக்கு வாரி வழங்கத் தயாராகிவிட்டார் என்று பெருமை பொங்குகிறார். அதேசமயம் சச்சினின் மீது அனைத்து சுமைகளையும் நாம்

இறக்கிவைத்துவிட்டு நாம் ஒதுங்கிவிடக் கூடாது. ஏனென்றால் சச்சின் பத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய அரிய பொக்கிஷம் என்றும் கூறுகிறார் க்ரெக் சேப்பல்.

இந்த நேரத்தில் சச்சினின் வாழ்வில் நடந்த சில முக்கிய நிகழ்வுகளை நினைத்துப் பார்க்க வேண்டும்.

1989 - 90ல் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியின் மூலம் இந்திய அணியில் இடம் பிடித்தவர் சச்சின் டெண்டுல்கர். இன்று ஒருநாள் போட்டிகளில் அதிக ரன்கள் குவித்தவர் - அதிக சதங்கள் அடித்தவர் - அதிக ஆட்ட நாயகன் விருது பெற்றவர் என்று பல பெருமைகளைக் கைவசம் வைத்திருக்கிறார். அப்படிப்பட்ட சச்சின் களமிறங்கிய முதல் போட்டியே மழை காரணமாகக் கைவிடப்பட்டது. ஆக அடுத்த போட்டிதான் அவருக்கு முதல் சர்வதேச போட்டி. ஆனால் சச்சின் அந்தப் போட்டியில் குவித்த ரன் பூஜ்யம். இவை எதற்கும் சச்சின் மனம் தளரவே இல்லை. தொடர்ந்து ஊக்கமுடன் விளையாடினார். இன்றும் சாதித்துக் கொண்டிருக்கிறார்.

அடுத்த முக்கியமான நிகழ்ச்சி, சச்சின் துவக்க ஆட்டக்காரராக விளையாடத் துவங்கியது.

திடீரென ஒருநாள் வழக்கமாக துவக்க வீரராகக் களமிறங்கும் நவ்ஜோத் சித்துவிற்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. அந்தப் போட்டியில் யாரைத் துவக்க வீரராக அனுப்பலாம் என்று அணி கேப்டனும் நிர்வாகமும் யோசித்துக் கொண்டிருந்த வேளையில், சச்சின் தானே முன்வந்து துவக்க ஆட்டக்காரராகக் களமிறங்கினார். தன்னுடைய புயல்வேக ஆட்டம் மூலம், வெற்றி - ஆட்ட நாயகன் - துவக்க ஆட்டக்காரர் என்று மூன்று சிக்ஸர்களையும் ஒரே பந்தில் அடித்தார். இது சச்சின் தனது திறமை மீது கொண்டுள்ள அபரிமிதமான நம்பிக்கை மற்றும் நமக்கான வாய்ப்பினை நாம்தான் உருவாக்கிக் கொள்ள வேண்டுமே தவிர யாராவது உருவாக்கித் தருவார்கள் என்று நம்பிக்கொண்டே காலம் தாழ்த்தக்கூடாது என்ற எண்ணம் ஆகிய இரண்டையும் வெளிப்படுத்துவதாக அமைந்தது.


ஆக சச்சினுடைய ஆட்டத்தைப் பார்க்கும் பொழுது, இன்னொரு உலகக் கோப்பையை வாங்கித் தராமல் விட மாட்டார் போலத் தெரியுதுல்ல... அசத்துங்க சச்சின்!



"அப்படின்னா இந்த ரோபோ நம்மை மாதிரியே பேசுமா அப்பா?" என்று ஆச்சரியத்துடன் தனது கண்களை விரித்தாள் கிறிஸ்டினா.

"கட்டாயம் பேசும்" என்று சொல்லிச் சிரித்தார் டாக்டர் இமானுவேல். பளபளவென்று மின்னிக் கொண்டிருக்கும் அந்த ரோபோவை உருவாக்கியவர் இவர்தான். சுமார் நான்கு அடி உயரம் இருந்தது அந்த ரோபோ. பெயர் ஜூ. அதன் இரண்டு கண்களும் பளபளவென்று மின்னிக்கொண்டிருந்தன. மிகுந்த சிரமப்பட்டு சுமார் ஆறு வருடங்களாக ஆராய்ச்சிகள் செய்து இறுதியில் இதை உருவாக்கியிருக்கிறார். எல்லாம் முடிந்துவிட்டது பேசுவதுதான் பாக்கி.

கிறிஸ்டினா தனது கையை நீட்டி, மெல்ல மெல்ல ஜூவின்






மருதன்

"என் பெயர் ஜூ"

கையை ஒரு முறை தொட்டுப் பார்த்தாள். ஜூ தனது தலையை இயந்திரம் போல் திருப்பியது. கிறிஸ்டினாவின் உடல் சிலிர்த்துக்கொண்டது. இதென்ன விந்தை, கதை புத்தகங்களில்தான் ரோபோ நடக்கும், பேசும், தேவைப்பட்டால் சண்டைகூட போடும்.



நிஜத்தில் இப்படி ஒரு ரோபோ இருக்க முடியுமா?

"அப்பா, இந்த ரோபோவை நான் என் ஃபிரெண்ட்ஸ்கிட்ட காமிக்கலாமா?"

"இப்ப வேண்டாம். இது பேச ஆரம்பிச்ச உடனே நானே இதை எல்லாருக்கும் அறிமுகப்படுத்தி வைக்கறேன். இப்போதைக்கு நீ இதைப் பத்தி யார்கிட்டயும் சொல்ல வேண்டாம். ஓகே?"

கிறிஸ்டினா தலையாட்டினாள்.

"அப்பா, ஜூ எப்போ பேசும்?"

"இதோ இப்பவே" என்ற குரல்

கேட்டு இருவரும் திடுக்கிட்டுத் திரும்ப ஜூ அழகாக தனது இரும்பு உதடுகளால் புன்னகைத்துக் கொண்டிருந்தது. டாக்டர் இமானுவேல் உற்சாகத்துடன் ஒரு குழந்தையைப் போல தனது இரண்டு கைகளையும் வேகமாகத் தட்டினார். ஜூ இமானுவேலை நெருங்கி தனது தலையைத் தாழ்த்தியது. இமானுவேல் அதை நாய்குட்டியைப் போல் ஒருமுறை தட்டிக் கொடுத்தார். அவருக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை!

பிறகு ஜூ ஒரு ராணுவ வீரனைப் போல சிறிது சிறிதாக திரும்பி கிறிஸ்டினாவை நெருங்கியது. "ஹலோ ஹவ் ஆர் யு மை லிட்டில் மேடம்?"

கிறிஸ்டினா திருதிருவென விழித்தாள். பயத்துடன் பின்னுக்கு நகர்ந்தாள். இமானுவேல் அவளது கையைப் பிடித்த முன்னால் இழுத்தார். "இதோ பார் கிறிஸ்டி, ஜூ நம்மோட ஃபிரெண்ட். இதைப் பார்த்து நீ பயப்படக் கூடாது. சுமான் இரண்டு பேரும் ஷேக் ஹேண்ட்ஸ் பண்ணிக்கோங்க..."

அடுத்த இரண்டு நாட்களில் கிறிஸ்டினாவும் ஜூவும் ஒருவரோடு ஒருவர் கோந்து போல ஒட்டிக்கொண்டனர். தான் இதுவரை படித்திராத ஒரு புது வகை ரோபோவாக ஜூ இருப்பதை கிறிஸ்டினா புரிந்துகொண்டாள். அதை ஒரு இயந்திரம் என்று சொல்லவே முடியாது. திரும்பும்பொழுதுகூட சாதாரணமாகத்தான் திரும்புகிறது. நகம் கடிக்கிறது. கிள்ளினால் அழுகிறது. சட்டையை அழுக்கு செய்துகொண்டே பல் துலக்குகிறது. காபிகூட குடிக்கிறது.

மற்ற ரோபோக்கள் செய்யாத வேறு சிலவற்றையும் ஜூ செய்தது. கிறிஸ்டினாவின் பென்சிலை எடுத்து வேண்டுமென்றே உடைத்தது. அல்லது அவளது ஹோம் ஒர்க் நோட்டைக் கொண்டு போய் க்ரோட்டன்ஸ் செடிக்குப் பின்னால் ஒளித்து வைத்தது. இருவரும் சண்டை போட்டுக் கொள்வார்கள். கிறிஸ்டினாவை அழ வைத்துவிட்டு ஜூ மட்டும் கடகடவென்று சிரிக்கும். இரண்டு கைகளையும் உயர்த்தி துள்ளிக் குதிக்கும். அல்லது ஏதாவதொரு சினிமா பாடலை சத்தமாகப் பாடும். இயந்திர பற்கள், இயந்திர நாக்கு என்பதால் அது பாடும்பொழுது

யார் இந்தப் பிரபலம்?



தனது 74வது வயதில் காலமானார்.

அசப்பில் மாவு மிஷின் வேலை செய்வது போலவே இருக்கும்.

கிறிஸ்டினா படித்த கதைப் புத்தகங்களில் வரும் ரோபோக்களைப் போல் ஜூ அப்படியொன்றும் பெரிய புத்திசாலியாக இருக்கவில்லை. இமானுவேல் சொல்லிக் கொடுத்த பாடங்களை ஜூ அழுது வடிந்து கொண்டே படித்தது. வரலாறு, ஆங்கிலம் இரண்டுமே அதற்கு அலர்ஜியாக இருந்தன. 'முதல் முதலாக ரோபோவை உருவாக்கியவர் யார்?' என்று கேட்டால் 'ஈஈஈ' என்று இரும்புப் பற்கள் தெரிய அழகாக இளித்தது. கணக்கு என்றால் கேட்கவே வேண்டாம்.

கிறிஸ்டினாவுக்கு ஜூ சற்று ஏமாற்றத்தை அளித்தது என்று கூட சொல்லலாம். ஜூவை வைத்து எல்லா ஹோம்வொர்க்கையும் செய்து முடித்து விடலாம் என்று கிறிஸ்டினா திட்டமிட்டிருந்தாள். ஆனால் புத்தகத்தைக் கண்டாலே முகத்தைத் திருப்பிக் கொள்ளும் ஜூவை வைத்து என்ன செய்ய முடியும்? சரி, பாடம்தான் படிக்கவில்லை, குறைந்தது நோட்டுக்கு அட்டை போட்டு லேபிளாவது ஒட்டித் தரலாமே என்றால் அதையும் ஜூ உருப்படியாகச் செய்யவில்லை. அட்டைகளை மாற்றி மாற்றிப் போட்டது. லேபிளைத் தலைகீழாக ஒட்டியது.

ஜூ உருப்படியாக செய்த விஷயங்கள் இரண்டு. ஒன்று



''அம்மா... மாம்பழம் வாங்கிக் கொடுங்கம்மா...''

''சீச்சீ... அந்த மாம்பழம் புளிக்கும்டா.''

''ஏம்மா பணம் கொண்டு வரலையா?''

- மு. பெரியசாமி

கால் மணி நேரத்திற்கு ஒரு முறை எதையாவது கொறித்துக் கொண்டிருப்பது. இரண்டு ரிமோட்டைக் கையில் எடுத்துக்கொண்டு ஓயாமல் கார்டூன் நெட்வொர்க், போகோ பார்ப்பது. டீ.வியில் வேறு ஏதாவது ரோபோ வந்துவிட்டால் ஜூ குதிக்க ஆரம்பித்து விடும். டீ.வி. ரோபோ என்ன செய்கிறதோ அதையே தானும் செய்யும்.


''ஐயாம் சாரி கிறிஸ்டி'' என்றார் இமானுவேல். ''ஜூ புத்திசாலியா இருக்கும். உனக்கு ஹெல்ப்ஃபுல்லா இருக்கும்னு நினைச்சேன். ஆனா அது விளையாட்டுத்தனமா இருக்கு. ஸோ, நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன்.''

கிறிஸ்டினா புரியாமல் விழித்தாள்.

''ஜூவுக்கு சின்னதா ஒரு ஆபரேஷன் செய்யப் போறேன். அதோட மூளை பகுதியை மாத்தப் போறேன். அப்படி செஞ்சிட்டா ஜூ இன்ட்டலிஜென்ட்டா மாறிடும்.''

''வேண்டாம்பா'' என்றாள் கிறிஸ்டினா. ''எனக்கு இப்ப இருக்கிற ஜூவே போதும். அதை மாத்தாதீங்க, ப்ளீஸ்'' என்றாள்.

''உனக்குப் புரியாது கிறிஸ்டி. என்னோட ஆராய்ச்சி சக்ஸஸ் ஆகணும்னா ஜூவோட இன்ட்டலிஜென்ஸ் லெவலை மாத்தியே ஆகணும். நான் கட்டாயம் ஜூவை மாத்தப் போறேன். வெயிட் அண்டு சீ...''



அடுத்த இரண்டு நாட்களில் இமானுவேல் ஜூவின் மூளையைப் பிரித்து சில மாற்றங்களைச் செய்தார். சில குட்டி சிப்களைப் பிரித்தெடுத்தார். புதிய சிவப்பு நிற சிப்களைச் சில பகுதிகளில் ஒட்டினார். ஒரு வாரம் கழிந்த பிறகு ஜூ தனது கண்களைத் திறந்தது.

என்ன ஆச்சரியம், ஆங்கிலம், வரலாறு, கணிதம் மூன்றையும் ஜூ ஊதித் தள்ளியது. கேள்வியை முடிக்கும் முன்பே படபடவென பதிலளித்தது. அழகாக அட்டை போட்டது. லேபிளை மிகச் சரியாக புத்தகத்திற்கு நடுவே ஒட்டியது. (சற்று சாய்த்து ஒட்டியது. கேட்டால் ஸ்டைலாம்!) கண் மூடி கண் திறப்பதற்குள் கிறிஸ்டினாவின் அனைத்து ஹோம்வொர்க்கையும் எழுதி முடித்தது. ரிமோட்டை எடுத்துக் கையில் கொடுத்தால்கூட போகோ பார்ப்பதேயில்லை. ஐஸ் க்ரீம் வேண்டுமா என்று கேட்டால், புன்னகைத்தபடி 'நோ தேங்க்ஸ்' என்றது. குரலில்கூட இனிமை கூடியது போல் தோன்றியது. முக்கியமா... கிறிஸ்டினாவிடம் வம்புக்குப் போவதேயில்லை. அவளை அழ வைப்பதில்லை.

இருந்தாலும்... இருந்தாலும்... இமானுவேலுக்கு ஒன்று மட்டும் புரியவேயில்லை. இவ்வளவு புத்திசாலியான ஜூவிடம் கிறிஸ்டினா ஏன் முன்பு போல் பழகுவதில்லை? ஏன் அவள் விலகி விலகிப் போகிறாள்? எவ்வளவு யோசித்தாலும் அந்த மிகப் பெரிய ஆராய்ச்சியாளருக்கு இந்தச் சிறிய கேள்விக்கு மட்டும் விடை கண்டுபிடிக்கவே முடியவில்லை!

ரேவதி ஆன்ட்டி டைம்ஸ்



தொட்டிலில் கோமகன்!

"குளிரும் பனியும் கொட்டிலிலே கோமகனும் தொட்டிலிலே - ஆரிரோ ஆரிரோ... ஆரிரரோ..." என்று நள்ளிரவில் 'கேரோல்' குழுவினர் பாடிக்கொண்ட செல்லும் ஓசை நம் மனதில் இதமான ஒரு சுகத்தை ஏற்படுத்தும். ஒவ்வொரு வீட்டிலும் நம்பிக்கை எனும் ஒளிச்சுடர் நட்சத்திரங்களாகப் பிரகாசிக்க, டிசம்பர் மாதக் குளிரும், தேவாலய மணி ஓசையும், வாழ்த்து மடல்களும், கிறிஸ்துமஸ் மரமும், பெரியவர், சிறியவர் அனைவரையும் ஒன்று சேர்க்கக் காணலாம்!

ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒரு யுக புருஷன் தோன்றுவார் என்று நம்பப்படுகிறது. அப்படி 2005 ஆண்டுகளுக்கு முன்னர் 'பெத்லஹேம்' எனும் ஊரில் ஓர் எளிய மாட்டுத் தொழுவத்தில் பிறந்த புனிதர் 'இயேசு'. எபிரேய மொழியில் இயேசு என்றால் மீட்பவர் என்று பொருள். ஆங்கிலத்தில் 'ஜீஸஸ்' என்பர். இந்த உலகத்தை ரட்சிப்பதற்காக மக்களிடையே உதித்த மாணிக்கம் ஏசுநாதர். அன்பு ஒன்றால் இந்த உலகனைத்தும் இணைய வேண்டும் என்று வாழ்ந்து காட்டிய 'ஏசுநாதரை' இந்த நன்னாளில் நினைத்து அவர் காட்டிய நல்லவற்றை நமது வாழ்கையிலும் கடைப்பிடித்து முன்னேறுவோம்! கிறிஸ்துமஸ் வாழ்த்துகள்!





உலகம் நம் வசமாக...



இருக்கும் இந்த இருபத்து
நாலு மணியை - நாம்
எப்படித் தான் தினம் தினம்-
பயன் செய்கிறோம்?
உறங்கு தற்குச் செல வழிக்கும்
மணிகள் எத்தனை? சும்மா
ஊரைச் சுற்றிப் பொழுதைப்
போக்கும்
மணிகள் எத்தனை?
உண்ப தற்குச் செல வழிக்கும்
மணிகள் எத்தனை? நம்
உடல் கெடுக்கச் செல
வழிக்கும்
மணிகள் எத்தனை?
படிப்ப தற்குப் பயன் படுத்தும்
மணிகள் எத்தனை? கலைப்
பயிற்சிக் காகப் பயன் படுத்தும்
மணிகள் எத்தனை?
பரிவு காட்டிப் பிறர்க் குதவும்
மணிகள் எத்தனை? நமைப்
படைத்தவர்க்கு நன்றி காட்டும்
கணங்கள் எத்தனை?
உண்மை யிலே காலப் பயன்
உணர்ந்து நடந்தால் - இந்த
உலக மெலாம் நம் வசமாய்
ஆகிடு மாமே!

- ரா. பொன்ராசன்

தாய்மொழி சிறக்க...



கவிதைப் பக்கம்



விடாமுயற்சியே வெற்றி!

கொட்டிக் கொண்டே
இருக்கிறது
குதித்து வீழும் பேரருவி!
ஓடிக் கொண்டே இருக்கிறது
ஒவ்வொரு கணமும் பல
நதிகள்!
துடித்துக் கொண்டே
இருக்கிறது
துல்லியமாக நம் இதயம்!
ஒலித்துக் கொண்டே
இருக்கிறது
உயர்ந்து புரளும் கடல்
அலைகள்!
நகர்ந்து கொண்டே இருக்கிறது
நம்மைச் சுற்றிய காற்றுவெளி!
உருண்டு கொண்டே
இருக்கிறது
உன்னத மான இவ்வுலகம்!
இயங்கிக் கொண்டே
இருப்பதுதான்
இயற்கை நியதி என
அறிவோம்!
'முயற்சி! முயற்சி!' இதுவேதான்
முழுதும் வாழ்க்கை என
உணர்வோம்!

- மதிவண்ணன்



காய் நன்றாய் இருந்தால்தான்
கனியாகி இனிக்கும்!
ஈ பூத்தேன் குடித்தால்தான்
தேனடைகள் கிடைக்கும்!
வாய் மொழியில் சிறந்தால்தான்
தாய்மொழியும் சிறக்கும்!
சேய் பண்பால் உயர்ந்தால்தான்
தாய்நாடு சிறக்கும்!

- தமிழ்முடி





ஒரு நாள் சுட்டி, பிட்டி என்ற இரண்டு கோழிக்குஞ்சுகள் குப்பையைக் கிளறி விளையாடிக் கொண்டிருந்தன. அப்போது காலை நேர இள வெயிலில், பளபளவென்று குப்பைக்குள் ஏதோ மின்னுவதை இரண்டும் பார்த்தன. ஏதாவது தின்பண்டமாக இருக்கும் என்று எண்ணி இரண்டும் அலகால் கொத்தின. பிட்டியின் அலகில் ஒரு தங்கக் காசு. அதேபோல சுட்டியின் அலகிலும் தங்கக் காசு. தாங்கள் கண்டெடுத்தது தங்கக் காசு என்று புரிந்தாலும், காசை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று இரண்டிற்குமே தெரியவில்லை. இரண்டும் தாயின் இருப்பிடத்தை நோக்கி விரைந்தன.

சுட்டியும் பிட்டியும் ஆளுக்கு ஒரு தங்கக் காசோடு தன்னை நோக்கி வருவதைக் கண்ட தாய்க் கோழிக்கு! தன் குஞ்சுகள் எதற்காக வருகின்றன என்று புரிந்துவிட்டது. எனவே இரண்டையும் பார்த்து, "என் கண்மணிகளே! நீங்கள் வைத்திருக்கும் இந்தக் காசு மனிதர்களுக்குத்தான் பயன்படும். நாம் இதை வைத்துக் கொண்டு அழகு பார்க்கலாம்; விளையாடலாம். உங்கள் இருவரில் யார் பயன் உள்ள முறையில் இந்தக் காசைப் பயன்படுத்துகிறீர்களோ அவர்களுக்கு நான் நவதானியங்கள் நிறையக் கொடுப்பேன்" என்றது.

கலர் கலராக சத்து மிகுந்த சுவையுள்ள நவதானிய மணிகள்! கேட்கும்போதே இரண்டிற்கும் அலகெல்லாம் இனித்தது. அம்மா



தங்கக் காசு!



விடம் நிறைய தானியமணிகள் பெற வேண்டும் என்ற ஆசையோடு இரண்டும் சின்னத் தலையை அழகாக அசைத்துக் கொண்டு கிளம்பின.

பிட்டி காடு இருக்கும் மேற்குத் திசை நோக்கிச் சென்றது.



மனிதர்கள் வசிக்கும் நகரத்தை நோக்கி கிழக்குப் பக்கமாக சுட்டி சென்றது.

தூரத்தில் பிட்டி வருவதைப் பார்த்த ஒரு குட்டிக்குரங்கு அதன் அருகில் வந்து, ''பிட்டி... பிட்டி... எங்கே போறே? நீ வைத்திருக்கும் தங்கக்காசு அழகாக இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு விளையாடலாமா?'' என்று கேட்டது. பிட்டிக்கு விளையாட்டு என்றால் ரொம்பவும் பிடிக்கும். எனவே சம்மதம் தெரிவித்தது. காசைத் தூக்கிப் போடுவதும் பிடிப்பதும் ஒளித்து வைப்பதும் கண்டுபிடிப்பதுமாக இரண்டும் விளையாடிக் கொண்டிருந்தன. அப்போது இன்னொரு குட்டிக் குரங்கு அங்கு வந்து அவர்கள் விளையாட்டில் சேர்ந்து கொண்டது. மூன்றும் நேரம் போவதே தெரியாமல் தங்கக் காசை வைத்து விளையாடிக் கொண்டிருந்தன.

பிட்டிக்குப் பசி வயிற்றைக் கிள்ளவே, தன் இருப்பிடத்திற்குப் போக நினைத்தது. அந்

டி.ஜானகி

தச் சமயம் இரண்டு குரங்குக் குட்டிகளும், ''பிட்டி, நீ ரொம்ப நல்ல பிட்டி இல்லே... இந்தத் தங்கக் காசை எங்களுக்கே கொடுத்து விடு. நாங்க இதை வைத்துக்கொண்டு விளையாடு கிறோம். ப்ளீஸ்'' என்று கெஞ்சின. பிட்டியும் ''காசை வைத்துக் கொண்டு சந்தோஷமாக விளை யாடுங்க'' என்று சொல்லிக் காசைக் கொடுத்து விட்டு, வந்த வழியே திரும்ப ஆரம்பித்தது.

கிழக்குப் பக்கமாகச் சென்று கொண்டிருந்த சுட்டிக்கு கால் வலிக்க ஆரம்பித்தது. அந்தச்சமயம் ஓர் ஆள் சைக்கிளில் வேகமாக வரவே பயந்துகொண்டு பாதையை விட்டு, சற்றுத் தள்ளியிருந்த அந்தக் குடிசை வீட்டு வாசலில் போய் நின்றுகொண்டது.

வாசல் கதவு பாதி திறந்து பாதி சாத்தியிருந்தது. உள்ளே யிருந்து கணவனும் மனைவியு மாக இரண்டு பேர் பேசுவது காதில் விழுந்தது. சுட்டி பேச்சைக் கவனிக்க ஆரம்பித்தது.

''பள்ளிக்கூடம் போக முடியாதபடி உடம்பு சரியில்லாம நம்ம மக ராஜாத்தி படுத்துக் கிட்டே இருக்கு. புள்ளய பார்க்கப் பார்க்க எனக்கு மனசுக்கு வருத்தமா இருக்கு மச்சான்.''

''டாக்டர்தான் சொல்லிட்டாரே, ஆபரேஷன் ஆனா பழைய படி ராஜாத்தி ஸ்கூலுக்குப் போகலாமாம். ஓடியாடி விளை யாடலாமாம். டாக்டர் கேட்கற பணத்துக்கு எங்கே போறதுன்னு தான் புரியலே புள்ளே.''

''நாம கூலி வேலை செஞ்சு உழைச்சு சாப்பிடற ஏழைங்க. கடவுள்தான் நம்ம பேர்ல இரக்கம் காட்டணும்.''

உரையாடலைக் கேட்ட சுட்டிக்கு, ராஜாத்தியை நினைக்கப் பாவமாக இருந்தது. மெதுவாக ஓசை இல்லாமல் உள்பக்கம் எட்டிப் பார்த்தது. எட்டு வயது சிறுமி ராஜாத்தி பாயில் முனகியபடி சுருண்டு படுத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

'கடவுளே! ராஜாத்திய காப்பாத்து. தங்கக் காசை இதோ இந்த வாசல்படியைத் தாண்டி பளிச்சுன்னு கண்ணுக் குத் தெரியறமாதிரி போடறேன். இதை வித்து ராஜாத்திக்கு வைத்தியம் செய்யட்டும்' என மனதிற்குள் வேண்டிக்கொண்டே தங்கக் காசை வாசல் தாண்டி உள்ளே போட்டது.

''டாக்டர் கிட்டே ஏதாவது மருந்து வாங்கியாரேன். நீ புள்ளய பார்த்துக்கிட்டிரு''-



''டாக்டர், செருப்பு கடிச்சுடுச்சுன்னா நான் என்ன பண்ணறது?''

''நீங்க ஒண்ணும் பண்ண வேண்டாம். செருப்போட வாயைத் தைக்கச் சொல்லுங்க.''

– ஆர். தங்கராஜ், திருப்பூர்

என்று கணவன் கூறுவது காதில் விழவே, சிட்டி ஓரமாக ஒளிந்துகொண்டது.

வெளியே வந்த ராஜாத்தியின் தந்தை கண்களில் தங்கக் காசு பட்டது. சுற்றும் முற்றும் பார்த்தார். யாருமில்லை. குனிந்து எடுத்துப் பார்த்தார். மகிழ்ச்சியோடு மனைவியைக் கூப்பிட்டார். இருவரும் தங்கக் காசை மாறி மாறி வாங்கிப் பார்த்தனர்.

"கடவுளே! என் மகளுக்கு வழி காட்டிவிட்டாய்" என்று கூவிய இருவரின் முகத்திலும் நம்பிக்கையும் உற்சாகமும் மாறி மாறி மின்னுவதைப் பார்த்ததும், சந்தோஷத்துடன் வந்த வழியை நோக்கி நடக்க ஆரம்பித்தது சுட்டி.



"மந்திரியாரே என் வாளின் மதிப்பை இந்தக் கயவனுக்கு எடுத்துக் கூறுங்கள்."

"திருடனே! இந்த வாளின் மதிப்பு ஒரு கிலோ பேரீச்சம் பழம்."

- சி.செ.ரங்கசாமி,
பதினோராம் வகுப்பு,
அ.ஆ.மே.நி.பள்ளி,
எடப்பாடி.

நேரமாகிவிட்டது. இன்னும் சுட்டி-பிட்டி இருவரையும் காணவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த தாய்க் கோழி, தூரத்தில் இரண்டும் இரண்டு திசைகளிலிருந்து வருவதைப் பார்த்ததும் மன நிம்மதி அடைந்தது.

தாய்க்கு அருகில் வந்த இரண்டும் நடைபெற்றதை விவரித்தன. பொறுமையாகக் கேட்ட தாய்க்கோழி, "பிட்டி! தங்கக் காசை நீயே வைத்துக் கொள்ளாமல் இரண்டு குட்டிக் குரங்குகளும் சந்தோஷமாக விளையாடக் கொடுத்து விட்டாய். நீ செய்தது எனக்குச் சந்தோஷமே."

கோழி தொடர்ந்தது.

"ஆனால் சுட்டி செய்ததைக் கேட்டாய் அல்லவா? நாம் செய்யும் உதவி மற்றவர்களுக்கு தக்க சமயத்தில் உதவுவதாய் அமைய வேண்டும். ராஜாத்தியின் உயிரைக் காக்க சுட்டி உதவி செய்திருக்கிறது. சொல்லப்போனால், உன்னை விட சுட்டிதான் சிறப்பான செயல் செய்திருக்கிறது. எனவே நிறைய நவதானியங்கள் அதுக்குத்தான்" என சொல்லி முடித்தது.

"அம்மா! ஒரே தட்டிலேயே நவதானியங்களைக் கொடு. பாவம் பிட்டி. அதுவும் ரொம்ப தூரம் நடந்து சென்று வந்திருக்கிறது. நாங்க இரண்டு பேருமே பகிர்ந்து சாப்பிடறோம்" என்று சுட்டி கூறியதைக் கேட்ட பிட்டி மகிழ்ந்தது.

தாய்க் கோழி பெருமையுடன் இருவரையும் பார்த்தது.



கிறிஸ்துமஸ் குடில்


● ஆஸ்திரியா நாட்டில் கிறிஸ்துமஸ் பண்டிகையை யொட்டி மூன்று மெழுகுவத்தி களை ஏற்றுவார்கள். முதல் மெழுகுவத்தியை திருவருகைக் கால முதல் நாள் இரவும், மற்றொன்று டிசம்பர் 25-ம் தேதி



யிலும், மூன்றாவது மெழுகு வத்தியை விழா முடியும் நாளான ஜனவரி 1-ம் தேதியும் ஏற்றுவார்கள். மெழுகுவத்தியைக் கொளுத்தும்போது, 'ஆண்டவரைப் புகழ்வோம், இயேசு பிறந்தார் ஆண்டவரைப் புகழ்வோம்' என்று கூறி மகிழ்வார்கள்.

● ஸ்பெயின் நாட்டில் கிறிஸ்துமஸ் தினத்தன்று வீட்டின் ஜன்னல்கள், வாசற்படிகள், முற்றம் ஆகியவற்றில் மெழுகு வத்திகளை ஏற்றி வைப்பார்கள். அப்படி வைத்தால்தான், இயேசு மைந்தன் தங்களது வீடுகளுக்கு வந்து ஆசி வழங்குவார் என்று ஸ்பெயின் மக்கள் நம்புகின்றனர். கிறிஸ்துமஸ் தினத்தன்று இரவு ஒருவருக்கொருவர் கட்டிப் பிடித்து வாழ்த்துத் தெரிவிப்பார்கள்.

● போலந்து நாட்டில் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன்பு விரதம் இருப்பது வழக்கம். கிறிஸ்துமஸ் அன்று விரதம் முடித்து விடுவார்கள். அன்று விருந்து உண்ணும்போது இயேசுவுக்காக ஒரு தனி நாற்காலியை யாரும் உட்காராமல் வைத்திருப்பார்கள். உணவு சாப்பிடும் மேஜையில், அந்த





நாற்காலி முன்பு இயேசு பாலனுக்காக இனிப்பு, கேக் மற்றும் பதார்த்தங்கள் வைக்கப்படும்.



● ஆஸ்திரேலியாவில் கிறிஸ்துமஸ் விழாப் பழக்கம் முற்றிலும் மாறுபட்டது. மற்ற நாடுகளிலெல்லாம் இந்தச் சமயத்தில் பனி மூடிக் கிடக்கும். ஆகவே அதை 'வொயிட் கிறிஸ்துமஸ்' என்பார்கள். ஆனால், ஆஸ்திரேலியாவிலோ இது அவர்களுக்கு மிட் சம்மர்; வேனில் காலத்தின் இடைப் பகுதி. ஆகவே கிறிஸ்துமஸ் விழாவை சூரிய ஸ்நானம் செய்தும், பிக்னிக்குகள் போயும் உல்லாசமாகக் கழிக்கிறார்கள்.

● இத்தாலியில் டிசம்பர் 23-ம் தேதி மாலையே கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் ஆரம்பமாகி விடுகிறது. மேலும் இந்த நாட்டில் பட்டாசு வெடித்து கிறிஸ்

என்.ஜரீனா பானு

துமஸ் விழாவைக் கொண்டாடுகின்றனர். காரணம், 1546-ல் முதன் முதலாக இத்தாலியில் வாண வேடிக்கை மற்றும் பட்டாசு முதலியவை தயாரிக்கப்





அன்று ஸ்வீடன் குழந்தைகள் தங்கள் தொப்பிகளில் வெள்ளி நட்சத்திரங்களை ஒட்டிக் கொண்டு வலம் வருவார்கள்.

● ஒவ்வொரு கிறிஸ்துமஸ் பண்டிகையின்போதும் நார்வே நாட்டு அரசாங்கம் கிறிஸ்துமஸ் மரம் ஒன்றை இங்கிலாந்து அரசுக்குப் பரிசாக வழங்குவது வழக்கம். இந்த நடைமுறை இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு வழக்கத்தில் உள்ளது. இந்தப் போரில் நார்வேக்கு, இங்கிலாந்து உதவியதால் இந்த நன்றிக் கடன்.

பட்டன. கிறிஸ்துமஸின்போது இவற்றை வெடித்து அப்போது கொண்டாடினார்கள். அது இன்றும் தொடர்கிறது.

● ஸ்வீடன் நாட்டில் கிறிஸ்துமஸ் தினத்தன்று, இறந்து போன முன்னோர்கள் மீண்டும் வீட்டுக்கு வருவதாக ஒரு ஐதீகம் உள்ளது. அதாவது வீடு அந்த முன்னோர்களுக்கு சொந்தம் போலவும், இப்போது குடியிருப்பவர்கள் ஏதோ வாடகைக்குத் தங்கி இருப்பது போலவும் பாவனைகள் செய்வது அவர்களது மரபு. கிறிஸ்துமஸ் நாளன்று, ஸ்வீடன் நாட்டு மக்கள் பச்சைச் செடிகளை 'கிறிஸ்துமஸ் மரமாக' நடுவதில்லை. மலர்களால் மட்டுமே கிறிஸ்துமஸ் மரங்களை அலங்கரிக்கின்றனர்.

● கிறிஸ்துமஸ் விழாவின் போது மாட்டுத் தொழுவம் போல் குடிசை அமைத்து அதில் இயேசு பாலன், அவரின் தாய் மேரி, தந்தை சூசை மற்றும் இடையர்கள், தரிசிக்க வந்த மூன்று ஞானிகள், ஆடு மாடுகள் போன்ற பொம்மைகளை 'கொலு' வைப்பது போல வீடுகளில், ஆலயங்களில் அமைத்து வழிபடுகிறார்கள். இப்படி குடில் வழிபாடு செய்வது ஆதியில் இருந்ததில்லை. கி.பி 1223-ல் இத்தாலி நாட்டில் ஃபிரான்சிஸ் அச்சி என்ற புனிதர் முதன்முதலில் குடில் அமைத்து கிறிஸ்துமஸ் விழாவைக் கொண்டாடும் முறையை கிரேச்சியா என்னும் ஊரில் துவக்கினார். அது இன்று உலகெங்கும் பரவி, கிறிஸ்துமஸ் விழா சடங்காகவே ஆகிவிட்டது.

பீட்டர் பரிசை எடுக்க வழி காட்டுங்கள்!






கொள்ளையர் கொண்டு சென்ற வைரம்!
கதை, படம்: தங்கர்
ரங்கநாதனும் கேசவனும் வைர வியாபாரிகள். அவர்கள் இருவரும் சேர்ந்து வைரம் வாங்க-ஒரு தீவுக்கு வந்தனர்.
ரங்கா, நான் வாங்க வேண்டியதை வாங்கிவிட்டேன். இரவு நெருங்குவதற்குள் ஊருக்குச் செல்ல வேண்டும். கொள்ளையர்கள் அதிகம் உள்ள இடம் இது.
கேசவா, இரு இன்னும் ஒரு பொருள்தான். விரைவில் வந்து விடுகிறேன்.
வைரங்களை, வாங்கிய பின் இருவரும் துறைமுகத்துக்கு வந்தனர்.
ரங்கா, அதோ கப்பல் வந்துவிட்டது.
இனி கவலை இல்லை.
கப்பலுக்குள் இருவரும் பேசிக்கொண்டே சென்றனர்.
கேசவா, இதோ பார் இரண்டு வைரக் கற்கள் வாங்கினேன். இதை நல்ல விலைக்கு விற்பேன்.
ஆஹா! அருமையாக உள்ளது.
கேசவா இந்த வைரக்கற்களைப் பத்திரமாக வைக்க வேண்டும்.
இதை உன் இடுப்புத்துணியில் வைத்து பத்திரப்படுத்து. அதுதான் நல்ல இடம்.
ஆம். நல்ல யோசனைதான். ஆமா, நீ வாங்கியதைப் பற்றிச் சொல்ல வில்லையே.
அதேநேரம், கொள்ளையர்கள் கப்பலில் ஏறினர்.


ம்... சீக்கிரம் ஏறுங்கள். இன்று நல்ல வேட்டை.
சீக்கிரம் எடுங்கள். பணம்... நகை... எல்லாத்தையும் கொடுங்கள். இல்லை வெட்டி விடுவேன்.
ஐயோ கடவுளே... என்னிடம் ஒன்றும் இல்லை. என்னை விட்டுவிடு.
ரங்கா உன் இடுப்புத்துணியில் உள்ள இரண்டு வைரங்களைக் கொடுத்துவிடு.
ஐயோ! கேசவா! நீயா இப்படி காட்டிக் கொடுக்கிறாய்?
கொள்ளையன் ரங்கநாதனின் வைரங்களைப் பறித்தான்.
ஆஹா அருமையான வைரங்கள்! சீக்கிரம் கிளம்பலாம்!
மன்னித்துவிடு ரங்கா, உன்னைக் காப்பாற்ற எனக்கு வேறு வழி தெரியவில்லை.
ரங்கா, என்னிடம் இருபது வைரங்கள் உள்ளன. உன்னிடம் உள்ள இரண்டு வைரங்களைக் காட்டிக் கொடுத்ததால்தான் என்னைச் சோதனை செய்யவில்லை. என்னால் நீ இழந்த இரண்டு வைரங்களை உனக்குத் தந்து விடுகிறேன். உன்னால், என் 18 வைரங்களும் காப்பாற்றப்பட்டன.
நன்றி கேசவா!

கிறிஸ்துமஸ் தாத்தா கொண்டு வந்த ஆப்பிள்கள் எத்தனை?

I எங்கள் பள்ளியில் மாணவர்கள் துறை ஐந்து உள்ளன. இதில் தமிழ்த் துறை இரண்டு நாட்களுக்கு ஒரு முறையும், ஆங்கிலத் துறை மூன்று நாட்களுக்கு ஒரு முறையும், கணிதத் துறை நான்கு நாட்களுக்கு ஒருமுறையும், 'அறிவியல் துறை ஐந்து நாட்களுக்கு ஒரு முறையும், சமூக அறிவியல் துறை ஆறு நாட்களுக்கு ஒருமுறையும் கூடும். எல்லா அமைப்புகளும் ஒன்றுகூடும் நாளன்று தலைமை ஆசிரியர் தலைமை தாங்குவார். அதுபோல ஆகஸ்ட் மாதம் 15-ந் தேதி முதன்முறையாகக் கூட உள்ளது. அடுத்தமுறை தலைமை ஆசிரியர் எப்பொழுது தலைமை தாங்குவார் என்று சொல்ல முடியுமா?

- கி. சிந்து.
மயிலாடுதுறை

II 1. கொய்யாப் பழத்துக்கு கொம்பும் உண்டு, காலும் உண்டு. ஆனால், எருதுக்கு இரண்டும் இல்லை. எப்படி?

2. ஒருகால் எழுந்தவுடன் இரு கால் முடிக்க முக்காலை எடுத்துக்கொண்டு நான் நாற்காலுக்குப் போகும்போது ஐந்து தலை நாகம் ஒன்று அஞ்சாமல் கடித்ததடா! இது எவ்வாறு...?

- எஸ்.எஸ். ரங்கசாமி,
பதினோராம் வகுப்பு,
அரசு ஆண்கள்
மேல்நிலைப்பள்ளி
எடப்பாடி



III குமாரும் பாலுவும் விளையாடிக் கொண்டிருந்தனர். குமார் வெற்றி பெற்றால் பாலு அவனுக்கு 5 ரூபாய் தர வேண்டுமென்றும், பாலு வெற்றியடைந்தால் குமார் அவ



புதிர் உலகம்

னுக்கு எட்டு ரூபாய் தர வேண்டும் எனவும் ஒப்பந்தம் செய்துகொண்டனர். மொத்தமாக 26 ஆட்டம் ஆடினர். இருவருக்கும் லாபமோ, நஷ்டமா இல்லை. அப்படியெனில் குமார் ஜெயித்தது எத்தனை முறை, பாலு ஜெயித்தது எத்தனை முறை?

- என். ஜரினாபானு,
திருப்பட்டினம்

IV கிறிஸ்துமஸ் தாத்தா கூடை நிறைய ஆப்பிள்களுடன் வந்தார். அந்த ஆப்பிள்களில் கால்பாகத்தை பாத்திமாவுக்கும், மீதி இருந்ததில் மூன்றில் ஒரு பங்கை சங்கருக்கும், அதன்பின் மீதி இருந்ததில் ஐந்தில் ஒரு பங்கை ஜோசப்புக்கும் வழங்கினார். அதன் பின்னர் அவரிடம் பதினாறு ஆப்பிள்கள் இருந்தன. அப்படியானால் கிறிஸ்துமஸ் தாத்தா முதலில் கொண்டு வந்த ஆப்பிள்கள் எத்தனை?

- குட்டி பிரசன்னா, கரூர்

V 1. மத்திய மருந்து ஆராய்ச்சிக் கழகம் அமைந்துள்ள இடம் ________

2. 'காமன்வெல்த்' விளையாட்டுப் போட்டிகள் முதன் முதலில் நடைபெற்ற இடம் ________

3. 'குறிக்கோள்' என்பதை இப்படியும் சொல்லலாம். ________

4. தண்ணீரைக் கண்டுபிடித்துத் தொகுத்தவர் ________

5. வண்ணத்துப் பூச்சிகளுக்குச் சரணாலயம் உள்ள இடம் ________

- சிவ. மணவழகி, திருவாரூர்

விடை 95 ஆம் பக்கம்



விடுகதைப் பக்கம்



I 1. விட்டம் போட்டு வீடு கட்டி விசிறி மாட்ட இடமில்லை - அது என்ன?

2. ஒன்றாகப் பிறந்த இரண்டு பேர். ஒருவரோடு ஒருவர் தொடுவதுமில்லை; பேசுவதுமில்லை - அவர்கள் யார்?

3. ஐயா வீட்டுத் தோட்டத்தில். ஐந்து வாழை மரம். பூக்காது. காய்க்காது- அது என்ன?

- மா. கண்ணன், இராஜபாளையம்

II. 1. கடிவாளம் போட்டாலே காலிலே கிடக்கும் - அது என்ன?

2. ஒன்றைப் பிரிந்து மற்றொன்று வாழாது - அது என்ன?

- த. மணிக்கலா, ஆதனூர்

III. 1. நெருப்புப் பட்டால் அழுவான் - அவன் யார்?

2. நாம் போனால் நம் கூடவே வருவான்; நிழலுமல்ல, நாம் வீட்டில் இருந்தால் வெளியிலே காத்திருப்பான் - அவன் யார்?

- ரா. மது, மாடம்பாக்கம்

IV. 1. கிட்ட இருக்குது பட்டணம்; எட்டிப் பார்க்க முடியவில்லை - அது என்ன?

2. கொம்பக்காளை இறங்கி வருது, பிடிக்கப் போனால் கொம்பைக் காணோம்- அது என்ன?

3. மஞ்சள் பங்களாக்குள் வெள்ளை பங்களா. வெள்ளை பங்களாக்குள் கறுப்புக்குள்ளர்கள் - அது என்ன?

- ர. அபிநயா, செஞ்சி

விசிறி மாட்ட இடமில்லை!



விடைகள்:

I 1. மூக்கு
2. கண்கள்
3. கை விரல்கள்

II. இரண்டிற்கும் விடை செருப்பு

III. 1. மெழுகு வத்தி
2. செருப்பு

IV. 1. முதுகு
2. நத்தை
3. வாழைப்பழம்



ஜப்பான் திருவிழா!

உலகின் முக்கிய நாடுகளில ஒன்றாகத் திகழும் ஜப்பான் நாட்டைப் பற்றி நெட்டில் படித்த சில சுவையான தகவல்களைப் பார்க்கலாமா?

● 'உலகிலேயே மிகவும் பழைமையான திருவிழா எங்களுடையதுதான்' என்கிறார்கள் ஜப்பானியர்கள். 'ஆய் மட்சூரி' என்ற திருவிழாவை ஆறாம் நூற்றாண்டிலிருந்து அவர்கள் கொண்டாடி வருகிறார்கள். வெள்ளத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றியதற்காக, கடவுளுக்கு நன்றி சொல்லும் திருவிழா இது. சுமார் ஐந்நூறு பேர் எட்டாம் நூற்றாண்டு காலப் பாரம்பரிய உடையில், கியோடோ இம்பீரியல் மற்றும் ஷிமோகாமோ கோவில்களுக்குச் செல்வார்கள். ஆண்டுதோறும் மே மாதம் இது கொண்டாடப்படுகிறது.

● உலகின் மிக நீளமான போக்குவரத்துச் சுரங்கப்பாதை ஜப்பானில் உள்ளது. பெயர்: சைகான் சுரங்கப்பாதை. ஹான்ஷவி, ஹொக்டைடோ ஆகிய இரண்டு தீவுகளையும் கடல் வழியே இணைக்கும் இந்தச் சுரங்கப்பாதையின் நீளம் 33.5 மைல். இதனுள் சாலைப் போக்குவரத்து தவிர ரயில் பாதையும் உண்டு. உலகின் மிக நீளமான



* நாக்கு கப்!



* புத்தக அலமாரி என்று நினைத்தீர்கள் என்றால் அது தவறு. நன்றாக உற்றுப் பாருங்கள், பென்சில்கள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன.


16 சுரங்க ரயில் பாதைகளில் ஏழு ஜப்பானில் உள்ளன.

● ஜப்பானில் உள்ள ஃப்யூஜி ஹைலண்ட் பார்க்கில் உள்ள ரோலர் கோஸ்டர்தான் உலகில் அதிபயங்கர வேகம் கொண்டது. அதன் பெயர்: டொடுன்பா. ஒரு கட்டத்தில் இதன் வேகம் 172 கி.மீ-ஐத் தொடும்.

● புத்தாண்டு வாழ்த்துகளை அனுப்புவது ஜப்பானில் மிகப் பிரபலமான பழக்கம். ஒவ்வொரு வருடமும் ஜப்பானியர்கள் மூன்றரைக் கோடி வாழ்த்துகளை அனுப்புகிறார்கள். ஜப்பானின் தபால் துறையின் வருமானத்தில் 20% வாழ்த்து அட்டைகள் மூலமே கிடைக்கிறது. புத்தாண்டுக்கு எவ்வளவு நாள் முன்னதாக போஸ்ட் பண்ணினாலும், சரியாக புத்தாண்டு தினத்தன்று, வாழ்த்துகளை விலாசதாரரிடம் டெலிவரி செய்வது ஜப்பான் தபால் துறையின் பழக்கம்.

● 4,9 இரண்டு எண்களும் அதிர்ஷ்டமில்லாதவை என ஜப்பானியர்கள் நம்புகிறார்கள்.

யார் இந்தப் பிரபலம்?



பாரதியாரால் 'பாவலர்' என்று பாராட்டப்பட்டவர். பாவேந்தர் என்று அறியப்பட்டவர்.

ஒரு கதை...

ஒரு காகம். அதன் மூக்கு லேசாக வளைந்து இருக்கும். அதன் காரணமாக, அந்தக் காகத்துக்கு ஒருவிதத் தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டது. மற்ற காகங்கள் இந்தக் காகத்தைக் கிண்டலடிப்பதும் அதனால், இது மனவருத்தம் அடைவதும் வாடிக்கை.

ஒருநாள், இந்தக் காகம், இன்னொரு காகத்தைப் பார்த்தது. அதன் உடம்பே சற்று வளைந்து இருந்தது. ஆனாலும், அது மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடிக் கொண்டிருந்ததைப் பார்த்தவுடன், இந்தக் காகத்துக்கு ஏதோ ஓர் உந்துதல். அந்தக் காகத்தைப் பார்த்து, "என்ன ஒரே உற்சாகம் கரை புரண்டு ஓடுகிறது?" என்று கேட்டது. அதற்கு அந்தக் காகம் பதில் ஏதும் சொல்லாமல், தொடர்ந்து பாடி ஆடிக்கொண்டே இருந்தது.

கிட்டே நெருங்கிப் போய் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டது. அந்தக் காகம், "எனக்கு காது கேட்காது. உரக்கப் பேசு" என்றது.

இந்தக் காகத்துக்கு மாபெரும் உண்மை புரிந்தது. நெளிந்த உடம்பு இருந்தபோதிலும், அந்தக் காகம் சந்தோஷமாய் இருப்பதற்குக் காரணம், அதற்குக் காது கேட்காததுதான். மற்ற காகங்களின் கேலியும் கிண்டலும் அதன் காதில் விழாததால், இந்தக் காகம் மன வருத்தம் அடையவில்லை. இனி நாமும், கேலி,

கிண்டலுக்குக் காது கொடுக்காமல், மதிப்புத் தராமல் இருக்க வேண்டும்'' என முடிவு செய்தது.

அதன்படியே செயல்பட்டது. சீக்கிரமே அதன் தாழ்வுமனப் பான்மை மறைந்தது.

அடுத்தபடியாக, சிறுவர்களுக்கான ஓர் இணைய தளத்தை சிபாரிசு செய்ய விரும்புகிறேன். 'www.pitara.com' இது அடிப்படையில் ஓர் இந்திய இணைய தளம். ஆனால் உலகளாவிய முறையில் குழந்தைகளைக் கவரும் வண்ணமாக இதனை உருவாக்கி இருக்கிறார்கள்.

சிறுவர்களுக்கான கதைகள், நாடோடிக் கதைகள், கவிதைகள், புதிர்கள், விளையாட்டுகள் என்று குழந்தைகளைக் கவரும் எல்லா அம்சங்களும் இதிலே இடம் பெற்றிருக்கின்றன. இந்தத் தளத்தில் ஏராளமான விஞ்ஞான, சரித்திர, பூகோள, விஷயங்கள் சுவையான முறையில் தரப்பட்டுள்ளன.

ஒருமுறை சென்றுதான் பாருங்களேன்!

அடுத்து ஜோக்ஸ்

ஆசிரியர்: தினமும் ஏன் நீ குளிப்பதில்லை?

மாணவன்: தாவரங்கள் உயிர் வாழ தண்ணீர் அவசியம். எனவே அவற்றுக்குத் தினமும் தண்ணீர் ஊற்றணும்னு சொல்லிக் கொடுத்தீங்க. அப்புறம், மனித உடம்பில் நிறைய தண்ணீர் இருக்குன்னும் சொன்னீங்க. அப்புறம் எதற்காக, தினமும் நாம தண்ணீரை ஊற்றிக் குளிக்கணும்?



''எங்க குடும்பத்தில் வலின்னு வந்தா மூட்டு வலிதான் வரும்.''

''எதனால்?''

''எங்க ஃபேமிலி, ஜாயிண்ட் ஃபேமிலி, அதனால்தான்.''

– ஆர். தங்கராஜ்,
பெரிச்சிபாளையம்

இரண்டு பேர் ஒரு சினிமா தியேட்டரில் நின்றுகொண்டு இருந்தார்கள். ஒருவர், இன்னொருவரிடம், ''சே! காலம் கெட்டுவிட்டது. அந்தப் பையனைப் பாருங்கள்! எவ்வளவு அநாகரிகமாக உடை அணிந்திருக்கிறான்?'' என்றார்.

அதற்கு அவர் சொன்னார்: ''நீங்கள் சொல்வது தப்பு. அது பையன் இல்லை. என்னுடைய மகள்!''

முதல் மனிதர்: ''ஓ! அது பெண்ணா! நீங்கள் அவளுடைய அப்பாவா?''

அடுத்தவர்: ''இல்லை! நான் அவளுடைய அம்மா!''

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி



நாடியாவில் மாயாபூர் என்னும் கிராமத்தில் 18.2.1486 அன்று ஜகந் நாத மிஸ்ராவுக்கும், சசிதேவிக்கும் பிறந் தவர் ஸ்ரீ சைதன்யர். வேப்பமரத்தடியில் பிறந் ததால் 'நிமாய்' என்றும் பொன்னிறமான தேகத் தைக் கண்டு 'கௌர் ஹரி' என்றும் ஜாதகப்படி 'விஷ்வம்பர்' என்றும் பெயர் சூட்டப்பட்டது.

ஆர்.பொன்னம்மாள்

நிமாய்க்கு விஷமம் செய் வதில் நிரம்ப ஆசை. ஒரு




நாள் மிஸ்ரா வின் வீட்டிறகு ஒரு விருந தாளி வந்தார். அவர் தானே சமைத்துத்தான் சாப்பிடுவார். இலையில் பரிமாறிக் கொண்டு கண்மூடி இறைவனைத் தியானித்தார். கண்ணைத் திறந்தால் நிமாய், ''மாமா, கூட்டு ரொம்ப நன்னாயிருக்கு'' என்று புகழ்ந்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

எச்சிலாகி விட்டதென்று மறுபடி சமைத்தார் விருந்தாளி. கிருஷ்ண விக்ரகத்தின் முன் வைத்து நைவேத்யம் பண்ண நீர் எடுத்து வருமுன் ''ஹை! எண்ணெய்க் கத்தரிக்காய்'' என்றபடி அதை உண்டு கொண் டிருந்தான் நிமாய்.

அதை ஒதுக்கிவிட்டு மிஸ் ராவின் வேண்டுகோளின் பேரில்

கண்ணனோடு கலந்தவர்!



மூன்றாம்முறை சமைத்தார் விருந்தினர்.

''நான் நிவேதனத்தைச் சாப்பிட்டால் மறுபடி சமைப்பாய்'' என்ற குரல் கேட்டுத் திரும்பினால் இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு குறும்புப் புன்னகை புரிந்துகொண்டிருந்தான் நிமாய். ஒரு நிமிடம் அவர் கண்களுக்கு கண்ணனாய் தெரிந்தான். அந்த முதிய பக்தர் அப்படியே மயங்கிச் சரிந்து விட்டார்.

பத்து வயதிற்குள் பண்டித ரகுநாத சிரோன்மணியிடம் சம்ஸ்கிருதத்தை இலக்கண சுத்தமாகப் படித்தார். பள்ளியில் வங்காள மொழியைக் கற்றார். தந்தை சேமித்து வைத்திருந்த நூல்களைப் படித்து அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

அண்ணன் விஸ்வரூபன் துறவு பூண்டதும்....நிமாயின் குறும்புகள் தொலைந்து போயின. தர்க்க வியாகரண வாதம் செய்து எல்லா ஊர்களிலும் வெற்றிக்கொடி நாட்டி வந்த கேசவ பண்டிதரை பலரின் கோரிக்கைக்கு இணங்க வாதிட்டு 'கௌரங்கா' என்ற சிறப்புப் பட்டம் பெற்றார்.

யார் இந்தப் பிரபலம்?



'பாண்டியன் பரிசு', 'அழகின் சிரிப்பு' ஆகிய பிரபல நூல்கள் இவர் எழுதியவைதான்.

'குரு, மீன், தண்ணீர், கஞ்சன், செல்வம், தாய், சிஷ்யன், மகன்' இவற்றை இணைத்து ஓர் அறிவுரை சொல்ல வேண்டும் என்பது போட்டியின் முக்கியப் பகுதி.

கேசவ மிஸ்ரா தலை குனிந்தார்.

''மீனுக்குத் தண்ணீர் உயிர் நாடி; கஞ்சனுக்கு செல்வமே ஜீவன்; தாயின் பாசம் மகன் மீது; நல்ல சீடனின் இலக்கணம் குருபக்தி'' ஸ்ரீ சைதன்யர் விடையளிக்க, கூடியிருந்த மக்களின் கரகோஷம் தெருவில் போவோரை உள்ளே இழுத்தது.

பூக்களில் வாசனையும், பசு மாட்டிடம் பாலும், பாலிலே நெய்யும், சிக்கிமுக்கிக் கல்லில் அக்னியும், மான் வயிற்றில் கஸ்தூரியும், எள்ளில் எண்ணெயும், வாய்க்குள் பகவானின் நாம சங்கீர்த்தனமும் மறைந்திருக்கிறது. வெளிப்பட்டால் அந்தந்த மூலப் பொருள் பெருமை பெறுகிறது'' என்பது போன்ற அவரது வாத உரைகள் மிஸ்ராவை பிரமிக்க வைத்தன.

''நீ சின்ன வைரக்கல்; நான் பெரிய கூழாங்கல்'' என்று

மனமார சைதன்யரை மிஸ்ரா பாராட்டினார்.

ஒரு தடவை பிரம்மானந்த பாரதி என்ற மகான் புலித்தோல் அணிந்திருந்தார். ஸ்ரீ சைதன்யர் அவரை வணங்க மறுத்தார். ஏன்' என்று கேட்ட போது,

"இறந்த மிருகத்தின் தோல் என்றால் பரவாயில்லை. பணத்துக்காக புலி, மான் இவற்றை அழிக்கிறார்கள். உயிர் பிரியும் நேரத்தில் அவை எப்படி துடிக்கும்? எல்லா உயிரிலும் இறைவன் இருக்கிறான்" என்றார் சைதன்யர்.

உடனே தோலாடையைக் களைந்து மரவுரியோடு வந்தார் பிரம்மானந்தர். உடனே அவரை நமஸ்கரித்தார் ஸ்ரீ சைதன்யர். ஜாதி, உயர்வு, தாழ்வு இவற்றை அழிக்க அரும்பாடு பட்டவர். அவர் வாழ்ந்த காலத்தை 'சைதன்ய சகாப்தம்' என்றே சொல்லலாம்.

"ஸ்ரீ சைதன்யர் பக்தியின் அவதாரம்" என்று ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸரால் போற்றப்பட்டவர்.

1534-ம் ஆண்டு. பூரி ஜெகந்நாதர் ஆலயத்தில் மெய்மறந்து ஆடிப்பாடினார் சைதன்யர். திடீரென்று எல்லாம் நின்றது. கதவுகள் மூடிக் கொண்டு திறந்தன. சைதன்யரின் உடல் இல்லை. கற்பூர, சாம்பிராணி, ஜவ்வாது வாசனைதான் இருந்தது!

கோகுலம் கருத்துப் படிவம்

கோகுலத்துக்கு ஏராளமானோர் மிகவும் ஆர்வத்துடன் கருத்துப் படிவத்தை நிரப்பி அனுப்பியிருந்தனர். உங்கள் அத்தனை பேருக்கும் எங்களின் நெஞ்சம் நிறைந்த நன்றிகள். முதலில் அனுப்பிய 25 பேர் ரூ. 50/- பரிசாகப் பெறுகின்றனர்.



1. எம். முத்துசெல்வி, விக்கிரமசிங்கபுரம், 2. கே. ராஜேஷ்குமார், அம்மையார்குப்பம், 3. அ. சந்தோஷ்குமார், பரமக்குடி, 4. ச. முகமது சரீப், பெரியூர்பட்டி, 5. வி. சசிரேகா, பாப்பநாயக்கன்பாளையம், 6. வி. பிரசன்னா, தூத்துக்குடி, 7. என். வருண், காரைக்குடி, 8. கே. சசிகலா, மன்னார்குடி, 9. வி.கோபி, கிருஷ்ணகிரி, 10. க. விக்னேஷ், புதுச்சேரி, 11. மா. மோனிகா, திருப்பத்தூர், 12. ஸ்ரீதேவிபாலா, இராஜபாளையம், 13. சி. ரம்யா, ராணிப்பேட்டை, 14. வே. ஐஸ்வர்யா, நல்லூரர், 15. கே.ஆர். சங்கர், கள்ளக்குறிச்சி, 16. மு. தனலக்ஷ்மி, தாயில்பட்டி, 17. இ. கிருபா, ஆண்டிபட்டி, 18. ஷாக்ஷம்ப்ரீனா, திருவிதாங்கோடு, 19. எம். சந்தியா, பெங்களூர், 20. ஜெ. ஸ்ரீதரன், சிவகாசி, 21. அ. அபிராமி, உத்திரமேரூர், 22. கோ. இராகவிஜயா, நெய்வேலி, 23. ஆர். பிரியதர்ஷினி, அரியலூரர், 24. ஆர். கீர்த்தனா, செஞ்சி, 25. மு. சீனிவாசன், சென்னை.



கிறிஸ்துமஸ் கலாட்டா!

மெல்ல சூரியன் பெட் காபி சாப்பிட்டபடி கண் விழித்



தது. கொட்டாவி விட்டபடி கண் விழிக்கும் குரங்கு, தான் இருக்கும் மரத்தின் கீழ் ஒரு புதிய நோட்டீஸ் ஒட்டப்பட்டிருப்பதைக் கவனித்தது. அதில்...

மை டியர் காட்டு நண்பர்களே! எல்லாருக்கும் என்னோட கிறிஸ்துமஸ் & புத்தாண்டு வாழ்த்துகள்! இன்னிக்கு ஈவினிங் 4 மணிக்கு உங்க வேலைகளை எல்லாம் தள்ளி வைச்சுட்டு, ஒரு ஸ்பெஷல் போட்டிக்காக தயாரா இருங்க! என்ன போட்டின்னா மாறுவேடப் போட்டி! யார் வேண்டுமானாலும் கலந்துக்கலாம். என்ன வேஷம்னாலும் போடலாம்! ஆனால் வேஷமும் பேசும் வசனமும் அசத்தலாக இருக்கணும்! போட்டி நடைபெறப் போகும் இடம்: ஏரிக்கரை. ஜெயிப்பவருக்கு ஒரு மூட்டை நிறைய பரிசுப் பொருட்கள் காத்திருக்கிறது. - இப்படிக்கு உங்கள் லவ்லி கிறிஸ்துமஸ் தாத்தா!

நோட்டீஸைப் பார்த்த விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் பரபரப்பு கூடிவிட்டது. எப்படியாவது போட்டியில் அசத்தலா வேஷம் போட்டு பரிசுகளை அள்ளிடணும் என கங்கணம் கட்டிக்கொண்டு ஒவ்வொன்றும் யோசிக்க ஆரம்பித்தன.

வேகமாகப் போய்க் கொண்டிருந்த சிங்கத்தைப் பார்த்து முயல் கேட்டது.


"சிங்கம்ஜி எங்க போறீங்க?"



அதற்கு சிங்கம், ‘‘சலூனுக்குப் போறேன். ஸ்டைலா ஹேர் கலரிங் பண்ணிட்டு அப்படியே ஷேவிங்கும் பண்ணிட்டு வரலாம்னு போறேன். ஈவினிங் அசத்தப் போறேன் பாரு!'' என்று சொல்லிய படி விரைந்தது.

‘‘ஹே! நான்

முகில்



ப்யூட்டி பார்லருக்கு ஃபேஷியலிங் பண்ணப் போறேன். நீயும் வர்றியா?'' என கொக்கிடம் கேட்டது மயில்.

''மாறுவேடம் போடுறதுக்கு காஸ்ட்யூம்ஸ் எங்க கிடைக்கும்னு உனக்குத் தெரியுமா? பக்கத்துல ஏதாவது சினிமா கம்பெனி இருக்கா?'' என நரியிடம் விசாரித்துக்கொண்டிருந்தது காட்டெருமை.

மணி, மாலை 3.30.

ஏரிக்கரையில் எல்லாரும் குவிந்துவிட்டார்கள்.

டாண் என நான்கு அடிக்க தன் டி.வி.எஸ் ஃபிப்டியில் வந்து இறங்கினார். கிறிஸ்துமஸ் தாத்தா! அவர் கையில் பெரிய பரிசு மூட்டை!

''ஹாய்! ஹேப்பி கிறிஸ்துமஸ் & நியூ இயர்! என்ன எல்லாரும் ரெடியா? போட்டியை ஆரம்பிக்கலாமா? கமான் கைஸ்!'' என உற்சாகமாகக் கத்தினார்



தாத்தா! போட்டி ஆரம்பமானது.

முதலில் பரத நாட்டிய உடையில் ஒயிலாக நடந்து வந்தது மான்!

மான்: (கரகரப்பான குரலில்) என்னடா பாக்குறீங்க! நான்தான் சந்திரமுகி! எங்கடா இருக்கு வேட்டையாபுரம் அரண்மனை! லகலகலகலக! தோம் தோம் தோம்... தோம் தோம் தோம்... என விழிகளை உருட்டி ஆட ஆரம்பிக்க பிற மான்கள் விசிலடித்து ரசித்தன.

இரண்டாவதாக வந்தது பூனை. உடல் முழுவதும் புலி போல் வரிகள். புலி போலவே ஸ்டைலாக நடந்து வந்தது.

பூனை: நான்தான் புலி. பதுங்குவேன். நான் ஒதுங்கிப் போறேன்னு நீங்க நினைக்கக் கூடாது. பாயறதுக்குத்தான் நான் பதுங்குவேன். புலி பசிச்சாலும் புல்லைத் திங்காது. ஆனா டைகர் பிஸ்கட் சாப்பிடும். இப்ப நான் கத்தப் போறேன்! பயங்கரமா கத்தப் போறேன்! பயந்த சுபாவம் உள்ளவங்க காதைப் பொத்திக்கோங்க! (தொண்டையைச் செருமிக் கொண்டு) மியாவ்! மியாவ்!

தன்னைக் கேவலப்படுத்திய பூனையை நிஜப் புலி வெறியோடு முறைக்க, அவ்வளவுதான்! அதற்குப் பின் பூனை எங்கே போனதென்றே தெரியவில்லை.

அடுத்து வந்தது சிங்கம். படு மாடர்னாக கோட், சூட்! முடியெல்லாம் ஸ்டைலாக சுருள் சுருளாக காற்றில் மிதந்தது. சிங்கம் பாடிக் கொண்டே கேட் வாக் பண்ணியது.

சிங்கம்: காட்டு சிங்கம் வருகுது ரெமோ!

மாடர்ன் டிரெஸ்ஸில் கலக்

குது ரெமோ!

அப்பள இதயங்கள் பத்திரம் ரெமோ!

ராம்ப் வாக் ரெமோ!

- ஸ்டைலாக வந்த சிங்க ரெமோ, திடீரென முடியை முன் பக்கம் இழுத்துப் போட்டுக் கொண்டு, கண்களைச் சுழற்றி, கரகரப்பான குரலில், 'அந்நியன் அவதரித்துவிட்டான்' என்று கூறி, செம கைதட்டல்களை அள்ளியது.

அடுத்து உலக அழகி வேஷத்தில், அதேபோல் உடையில் தலையில் கீரிடத்துடன் வந்தது மயில்.

மயில்: ஹாய் டியர்ஸ், நான் தான் 2006 உலக அழகி மயில்மா! உலக அழகிங்க எல்லாம் சினிமாவுல நடிக்கப் போயிடுறாங்க! பட், நான் அப்டி பண்ண மாட்டேன். நான் இப்ப 10 அட்வர்டைஸ்மெண்ட்ஸ்ல மட்டும்தான் நடிக்கிறேன். மத்தபடி சோஷியல் சர்வீஸ்தான் என் மூச்சு! எனக்கு பிட்ச்சது மதர் தெரஸாதான். ஐ லவ் இந்தியா!''


- என மயில் சொல்லிவிட்டுப் போக அதன் அழகில் எல்லாம் மயங்கிப் போயின.

எமன் வேஷத்தில் பெரிய கதை வைத்துக்கொண்டு எருமை மாடு, வீரப்பன் வேஷத்தில் பெரிய மீசை வைத்துக்கொண்டு குரங்கு, ஜோசியக்காரன் வேஷத்தில் கிளி, குறவன் வேஷத்தில் நரி, டெண்டுல்கர் வேஷத்தில் குதிரை என எல்லாம் பல வேஷங்கள் போட்டு வந்து, பாடி ஆடி நடித்து அசத்தின!

இறுதியில் மேடையேறினார் கிறிஸ்துமஸ் தாத்தா!

''எல்லாரும் ரொம்ப சூப்பரா வேஷம் போட்டு வந்தீங்க! ரொம்ப ஆர்வத்தோட கலந்துக்கிட்டீங்க! தாங்க்ஸ்! இப்ப ரிசல்ட் சொல்லுற நேரம் வந்தாச்சு! எல்லாரும் நல்லா பண்ணுனதால யாருக்குப் பரிசு கொடுக்கறதுன்னே தெரியல! அதனால நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கேன். உங்க எல்லாரையும்விட ரொம்ப நல்லா நடிச்ச நானே இந்தப் பரிசுப் பொருட்களை வெச்சுக்கறேன். ஏன்னா, நான் கிறிஸ்துமஸ் தாத்தா இல்ல! கரடி!''

- என கரடி தன் முகமூடியைக் கழற்றிவிட்டு ஓட ஆரம்பிக்க, டென்ஷன் ஆன மற்றவையெல்லாம் கரடியைத் துரத்த ஆரம்பித்தன!



''ஆன்ட்டி உங்ககிட்ட சுகர் இருக்கா?''

''சுகர் இல்ல, பிரஷர் தான் இருக்கு!''

- ஆர். பிரியதர்ஷினி,
ஏழாம் வகுப்பு,
மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
அரியலூர்

5 துப்பறியும் துஷ்யந்த்!

கதை: மாயூரன் படம்: ராம்கி





வீட்டு விஷயமா? இன்னும் விவரமாகச் சொல்லு.
அவங்க அம்மா பெங்களூர் போயிருக்காங்க. நகைகளை லாக்கரில் வைக்க வங்கிக்குப் போகணும் வர்றியான்னு கூப்பிட்டா?
உங்க உரையாடலை யாரேனும் கேட்டிருப்பார்களா?
கேச் தி பாயிண்ட்!
ம்... ஒருவன் எங்களைக் கவனித்துக் கொண்டிருந்தான்.
அந்த ஆள் மீது சந்தேகமா?
நேரில் பார்த்தால் அவனை அடையாளம் காட்ட முடியுமா?


மாலையில் தியேட்டருக்குச் சென்றனர்.
இந்த இடம்தான்... அந்த ஆள் இங்கே அருகில்தான் இருந்தான்.
என்ன தம்பி பார்க்கறீங்க?
இங்கே இன்னொருத்தர் இருப்பாரே முரட்டு மீசையுடன்?
முத்துவா? ரெண்டு நாளா வேலைக்கு வரலையே!
வலை நெருங்குகிறது.
அவர்தான் வரச் சொல்லியிருந்தாரு. அவரு வீடு எங்கே தெரியுமா?
எதுக்கு கேக்கறீங்க?
டிரைவர் அவசரமாகத் தேவை. முத்து விலாசம் கொடுங்களேன்.
ஸ்டாலிலே இருக்கும் முனுசாமி முத்துவோட உறவு. அவரைப் பாருங்க!
முனுசாமி நீங்கதானே?
ஆமாம்.


முத்து உங்களைப் பார்க்கச் சொன்னாரு. இரகசியம்!
முத்துவா? நீங்க யாரு? எதுக்கு என்னைப் பார்க்கணும்?
முத்து சேதி சொல்லி அனுப்பியிருக்காரு!
என்ன சேதி? எங்கே பார்த்தீங்க?
அந்தப் பொண்ணு விஷயம்தான்!
என்ன சேதி சொன்னான்?
உங்களை ரகசியமாகச் சந்திக்கணுமாம்.
பாவிப் பய நகைக்கு ஆசைப்பட்டு சிக்கல்லே மாட்டிக்கிட்டான். சுங்குவார்சத்திரம் வரச் சொன்னானா?
படம் முடிஞ்சதும் நேராக அவர் வீட்டுக்கு வரச் சொன்னாரு.
சரி.
(அடுத்த இதழில் முடியும்)


கோகுலம்
போஸ்டர்
அழகிய ஸ்விஸ்!



தனிமை...

உலகப் புகழ் பெற்ற ஓவியர் பிகாஸோ தனிமையையும் அமைதியையும் பெரிதும் விரும்புபவர். அவருடைய 90வது பிறந்த நாள், அன்று ஃபிரான்ஸ் நாடு முழுவதும் அதைக் கோலாகலமாக கொண்டாடியது. பிகாஸோ வாழ்ந்து வந்த விலாரி என்ற கிராமம் அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது.



* பெர்னாட் ஷா

பிகாஸோ அன்று தன் அறையின் கதவை உள்புறம் தாளிட்டுக் கொண்டு படம் வரைந்து கொண்டிருந்தார். அன்று முழுவதும் வெளியே வரவேயில்லை!

- என். ஜரினா பானு, திருப்பட்டினம்

வாயிலில்...

கி.வா. ஜகந்நாதனிடம் ஒருவர் "சாப்பிட்ட பிறகு வெற்றிலை போடும் பழக்கம் உமக்கு உண்டா?" என்று கேட்டார்.

அதற்கு கி.வா.ஜ. "ஓ... உண்டே! ஆனால் வெற்றிலையை வாயில் போட மாட்டேன். வாயிலில் போடுவேன்" என்றார்.

அங்கிருந்த அனைவரும் 'திருதிரு'வென விழித்தனர்.

கி.வா.ஜ. "சாப்பிட்ட பிறகு 'வெற்றிலை'யை அதாவது வெறும் இலையை வாயிலில் உள்ள குப்பைத் தொட்டியில் தானே போட வேண்டும்?" என்று கூறி அனைவரையும் சிரிக்கச் செய்தார்.

- இரா. பிரசன்னா, கரூர்

உண்மையான மதிப்பு!

ஒருமுறை போரில் பெரிய தங்கப்பெட்டி ஒன்றை எதிரிகளிடமிருந்து கைப்பற்றியது

* அலெக்சாண்டர்



பிரபலங்களின் வாழ்வில்...



தங்கப் பெட்டி!

அலெக்சாண்டர் படை. அதை அலெக்சாண்டரிடம் காட்டிய படைத்தளபதி, "அரசே! விலை மதிப்பில்லாத இந்தத் தங்கப் பெட்டியை எங்கே வைப்பது?" என்று கேட்டார். அதற்கு அலெக்சாண்டர், "நீ நினைப்பது போல் இது விலை மதிப்பில்லாதது அல்ல. இதன் விலையை யாராவது பொற்கொல்லரிடம் கேட்டால், மதிப்புப் போட்டு சொல்லி விடுவார். என்னிடம் இருக்கும் புத்தகங்களைப் பத்திரமாக வைப்பதற்கு இந்தப் பெட்டியைப் பயன்படுத்து. அப்போதுதான் இந்தப் பெட்டிக்கு உண்மையான மதிப்பும் மரியாதையும் வரும்" என்றார்.

- அ. பேச்சியப்பன்
இராஜபாளையம்



* பிகாஸோ

கடவுளுக்கு நன்றி!

அறிஞர் பெர்னாட் ஷாவைப் பார்த்து அவருடைய நண்பர் ஒருவர் "பெர்னாட் ஷா, திடீரென்று உமக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார். அதற்கு பெர்னாட் ஷா "கடவுளுக்கு நன்றி சொல்வேன்" என்றார். குழப்பமடைந்த நண்பர், "கடவுளுக்கு நன்றியா! ஏன்?" என்றார்.

"பைத்தியக்காரத்தனமான கேள்விகளைக் கேட்கும் உங்களைப் போன்ற நண்பர்கள் என்னை நெருங்கப் பயப்படுவார்கள் அல்லவா? அதனால்தான்" என்றார் பெர்னாட் ஷா, அமைதியாக.

- மா. கண்ணன்,
இராஜபாளையம்





தும்மினால் ரத்தினம்!

இளவரசிகள் சுந்தரி, சௌந்தரி இருவரும் தேவியின் அருளால் காட்டில் வசித்து வந்தனர்.

கூர்ஜரத்தின் இளவரசர்கள் மதிவதனனும் மதுசூதனனும் இணைபிரியாதிருப்பார்கள். அவர்களின் தந்தை தனது தங்கை மகளை மணக்கும்படி வற்புறுத்தினார்.

மன்னரின் தங்கை மகள் பாமினி குரூபி. அவளை மணக்க இருவருக்கும் விருப்பமில்லாததால் நாட்டை விட்டு ஓடிவிட்டனர். காட்டில் அவர்கள் இளவரசிகளின் மாளிகையைக் கண்டு அதிசயித்தனர்.

என்ன ஆச்சரியம்! கதவில் கை வைத்ததுமே அது திறந்து கொண்டது.

"உங்களது மணாளர்களாக வருபவர் தொட்டால் மட்டுமே கதவு திறக்கும். அஞ்சாதிருங்கள்'' என்று அம்பிகை அருளியிருந்தாள்.

மறுநாள் மதிவதனன் சுந்தரியையும், மதுசூதனன் சௌந்தரியையும் மோதிரம் மாற்றி விவாகம் செய்து கொண்டனர்.

சில தினங்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தபின், பெற்றோரிடம் சென்று நடந்த விஷயங்களைச் சொல்லி முறைப்படி அவர்களை அழைத்துக் கொள்வதாக விடை பெற்றுச் சென்றனர்.

பெற்றோர் பிள்ளைகளை அன்புடன் வரவேற்றனர். நடந்தவற்றைக் கேள்விப்பட்டு மகிழ்ந்தனர்.

இதையெல்லாம் பாமினியும் கேட்டாள். 'தன்னை இனி யார் மணம் செய்து கொள்வார்கள்? என்று குமுறினாள். தன் வாழ்வைப் பறித்துக் கொண்ட சுந்தரி, சௌந்தரியைக் கோரப்படுத்துவதென்று முடிவு செய்தாள்.

தன்னை வளர்த்த பாட்டியிடம் அடையாளம் சொல்லி எப்படி




யாவது ராஜகுமாரிகளை அழைத்து வரும்படி அனுப்பி வைத்தாள்.

கிழவியும் தன் இஷ்டத்துக்குப் புளுகி வேலையில் சேர்ந்து கொண்டாள்.

ஒரு வாரம் சென்றது. கிழவி எண்ணெயில் மயக்க மருந்து கலந்து தலையில் தேய்த்தாள். இருவரும் மயங்கி விட்டனர்.

சேவகர்கள் பல்லக்கைக் கொண்டு வந்து இருவரையும் அதில் தூக்கிப் போட்டனர். பல்லக்கு பாமினியின் மாளிகையில்



வந்து இறங்கியது.

நாவிதரை வரவழைத்து இருவருக்கும் மொட்டையடித்தாள். உடல் முழுவதும் ஊசிகளைக் குத்தி பாழுங்கிணற்றில் வீசச் செய்தாள்.

மூன்று தினங்கள் கழித்து இருவருக்கும் மயக்கம் தெளிந்தது. உடலெல்லாம் ரண வேதனை.

ஆனாலும் சக்தியெல்லாம் திரட்டி, "காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்" என்று குரல் கொடுத்தனர்.

அந்தப் பக்கமாக வந்த ஒரு குடியானவன் இரக்கப்பட்டு கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தான். ஒரு நீண்ட கயிற்றை விட்டு இருவரையும் மேலே வர உதவினான்.



"மன்னா, நமது அரண்மனைக்குப் பேரிச்சம் பழ வியாபாரிகள் வந்துள்ளனர்."

"எதற்கு?"

"நாம் பல வருடங்களாகப் போர் புரியவில்லை என்பதை அறிந்து வந்துள்ளனர்!"

– சி.செ.ரங்கசாமி,
பதினோராம் வகுப்பு,
அ.ஆ.மே.நி.பள்ளி,
எடப்பாடி.

சுந்தரி மூக்கில் திரியை விட்டாள். மூன்று தும்மல் வந்தது. தும்மலோடு மூன்று ரத்தினங்களும் வந்தன.

"ஐயா! இவை உங்களுக்குதான்! எடுத்துக் கொள்ளுங்கள். மருத்துவரை அழைத்து வந்து எங்கள் துன்பத்தைத் தீருங்கள்" என்றாள்.

இளவரசிகள் விரைவில் குணமடைந்தனர்.

குடியானவனின் மகள் யாமினி இளவரசிகளிடம் மிகவும் பிரியமாக இருந்தாள். இளவரசிகளின் உதவியால் குடியானவன் நூறு பசுக்கள் வாங்கினான். அரசகுமாரிகள் கெட்டியான பால், தயிர், பால்கோவா, நெய் எல்லாம் தயாரித்து யாமினிக்குக் குறைந்த விலையில் விற்கச் செய்தனர்.

இதனால் பாமினி தினமும் யாமினியின் வரவை ஆவலோடு எதிர்பார்த்தாள்.

இதற்கிடையே இளவரசிகளை அழைத்து வர காட்டுக்குச் சென்ற ராஜகுமாரர்கள், 'மாளிகை இருக்கிறது. மங்கையரைக் காணோமே' எனத் தவிப்போடு திரும்பினர்.

அரசர் சினத்தோடு "அடுத்த வாரம் உங்கள் இருவரில் ஒருவர் பாமினியை மணக்க வேண்டும். இல்லையேல் இருவருமே நாடு கடத்தப்படுவீர்கள்" என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்.

சுந்தரியும், சௌந்தரியும் சித்திரக்காரர்கள் வடிவில் அரண்மனைக்குச் சென்றனர். அரசரிடம் "வேந்தே! கவலை வேண்டாம். ஒரே சமயத்தில் உங்களது இரு

புதல்வர்களும் திருமணத்துக்கு ஒப்புதல் தருவர். எங்கள் கைராசி அப்படிப்பட்டது. ஆனால் நாங்கள் சித்திரங்களைப் பூர்த்தி செய்யும் வரை எவரும் அங்கு பிரவேசிக்கக் கூடாது. முதலில் ஓவியங்களைப் பார்க்க இளவரசர்களே வரவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டனர்.

அரசர் சம்மதித்தார்.

அதே சமயம் யாமினி தனது நீண்ட தலைமயிரை ஒரு கத்தரிக் கோல் வாங்கி பாதியாக வெட்டினாள்.

பாமினி ஆச்சரியத்துடன் காரணம் கேட்டாள்.

''அதை ஏம்மா கேட்கறீங்க? இமயமலையிலேயிருந்து ஒரு சித்தர் வந்திருக்கார். அவர் கொடுத்த தைலத்தைத் தடவினா தலை காடா வளருது. அதான் குறைக்கிறேன் உங்களுக்குச் செம்பட்டை முடி. மொத்த முடியையும் எடுத்துட்டு தைலம் தடவினா தலைமுடி கருகருன்னு நீளமா வளரும்'' என்று இளவரசிகள் சொல்லிக் கொடுத்தபடி சொன்னாள்.

''அடடா! அடுத்த வாரம் கல்யாணம் வைச்சிருக்காங்களே!'' என்று பாமினி ஆதங்கப்பட,

''அதெல்லாம் ஆறு நாளிலே ஒரு அடி என்று வளர்ந்து விடும். கவலையே வேண்டாம்'' என்றாள் யாமினி.

''முதல்லே கொஞ்சம் எரியும். பொறுத்துக் கொள்ளணும்'' என்றபடி தேனில் குழைத்த மிளகாய்ப் பொடியை மொட்டைத் தலையில் தடவினார் போலி வைத்தியர்.



''நல்ல ஜலதோஷம். மூக்கு ஒழுகிக்கிட்டே இருக்கு. அதான் வாடகை வசூல் பண்ண வர முடியலே!''

''உங்க வீட்டுக்கு நல்ல ஜலதோஷம்! வீடு பூரா ஒழுகிக் கிட்டே இருக்கு. அதான் வாடகை தர முடியலே!''

- கே. பிரியங்கா,
நான்காம் வகுப்பு,
டைமன் மெட்ரிகுலேஷன் பள்ளி,
ஆலாங்கொம்பு

அரசகுமாரர்கள் ஆவலோடு கல்யாண கூடத்துக்குள் சென்றனர். அங்கே அரசகுமாரர்கள் இளவரசிகளைச் சந்தித்து மணம் புரிந்து கொண்டது முதல் பாமினி மொட்டையடித்து கிணற்றில் தள்ளியது, எப்படி உயிர் தப்பினர், எங்கு தங்கி உள்ளனர் என்பது வரை உயிரோவியங்களாகச் சித்தரிக்கப்பட்டிருந்தன.

இளவரசர்கள் குடியானவன் வீடு தேடி வந்து சுந்தரி, சௌந்தரியை அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்தனர்.

1000/- ரூபாய் பரிசுப் போட்டி

இங்கு 5 கேள்விகளும் 6 படங்கள் மற்றும் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடித்து எழுதுங்கள். பெற்றோர் கையொப்பம் அவசியம். முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள். மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி : **20.12.2005**

I. பதில் என்ன?

1. இது எந்த ஊர்க் கோயில்?
2. இது சோழர்களால் கட்டப்பட்டது. சரியா?
3. இதைக் கட்டிய மன்னர் யார்?
4. இந்த ஊருக்கு இருக்கும் இன்னொரு பெயர்?
5. அர்ஜுனன் தவம் சிற்பமும் இங்கு உள்ளது. சரியா?



II. டென்னிஸ் வீரர்களின் பெயர்களைச் சரியாக எழுதுங்கள்.














ரோஜர் ஃபெடரர், செரீனா வில்லியம்ஸ், பீட் சாம்ப்ராஸ், லியாண்டர் பயஸ், மரியா ஷரபோவா, ரஃபேல் நடால்

ஆசிரியர்,
கோகுலம்.
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



சோம்பலை விரட்டுவது

அன்புள்ள டாக்டருக்கு,

படிப்பதில் மட்டுமல்லாமல் எந்த ஒரு வேலையைச் செய்ய வேண்டுமென்றாலும் உற்சாகம் இல்லாமல் சோம்பேறித்தனமாகவே உள்ளேன். அனைவரிடமும் திட்டு வாங்குகிறேன்.

- பொ. துரை அழகேசன், திருவண்ணாமலை



குறிப்பிட்ட ஒரு செயலைச் செய்வதற்கு ஆர்வமில்லை என்றால் சோம்பேறித்தனப்படுவோம். அடுத்து அச்செயலை எப்படி செய்வது என்று தெளிவாகத் தெரியாத போது சோம்பேறித்தனம் வரும். அல்லது அச்செயலைத் தவறாகச் செய்துவிட்டால் மற்றவர்கள் சிரித்து விடுவார்களோ என்ற பயம் வரும்போது சோம்பேறித்தனம் எட்டிப் பார்க்கும்.

உன்னைப் பொருத்த அளவில், எந்த ஒரு செயலையும் செய்வதற்கு உன்னிடம் திறமை உள்ளது. அந்தத் திறமையை வெளிக் கொண்டுவரத் தேவையான முயற்சிதான் இல்லை. இப்போது உடனடியாக உனக்குத் தேவைப்படுவது ஓர் இலக்கு. அதாவது எதிர்காலத்தில் நீ என்னவாக வேண்டும் என்று ஆசைப்படுகிறாய்? உன் வாழ்க்கைக் குறிக்கோள் என்ன? முதலில் அதைத் தெளிவாக்கிக் கொள்.

சரியான இலக்கு உன் உள்ளத்தில் குடி கொண்டுவிட்டால் போதும், உன்னை அறியாமலேயே அதை அடைவதற்குரிய ஊக்கமும் உற்சாகமும் ஊற்றெடுக்கும். உன் ஊக்கத்தை ஒருமுகப்படுத்தினால் முயற்சிகள் முளைவிடத் தொடங்கும். உன் முயற்சிகள் விருட்சமாகும்போது, சோம்பேறித்தனம் உன்னிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளும். எடுத்துக்காட்டாக, உன் வகுப்பில் நீ முதல் மதிப்பெண் பெற வேண்டும் என்பதுதான் இப்போதைய இலக்கு என்று வைத்துக்கொள்வோம். அதற்கு நீ என்ன செய்ய வேண்டும்? பாடங்களில் உன் கவனமும் ஆர்வமும் அதிகரிக்க வேண்டும். அப்படி அதிகரிக்கும்போது வகுப்பில் பாடம் புரிவது எளிதாகும். புரிந்த பாடத்தை வீட்டில் மீண்டும் ஒரு முறை படிக்கும்போது எளிதில்

மனமே நலமா?





மனனம் ஆகிவிடும்.

இதுவரை நீ அதிகாலையில் எழுந்திருப்பதற்கே சோம்பேறித் தனப்பட்டிருப்பாய். இப்போதுதான் உனக்குப் படிப்பில் ஆர்வம் வந்து விட்டதே! அந்த ஆர்வம் உன்

எப்படி?


னைச் சீக்கிரமே எழுப்பி விடும். முதல்நாள் இரவில் படித்ததை காலையில் எழுதிப் பார்ப்பாய். இதனால் படித்த பாடம் மேலும் தெளிவாகும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிடைக்கும். உன் 'ரேங்க்' முன்னேறும். 'அட, நம் மாலும் முடிகிறதே!' என்று நீயே பாராட்டிக்கொள்வாய். இது உன் தன்னம்பிக்கையை அதிகப்படுத் தும்.

இது உன் பெற்றோருக்கு: குழந்தைகளை 'நீ சோம்பேறி', 'நீ எதற்கும் லாயக்கில்லை' என்று பழிப்பதை முதலில் நிறுத்துங்கள். இம்மாதிரியான குற்றச்சாட்டுகள் தொடர்ந்தால் குழந்தை தன்னால் ஒன்றும் செய்ய இயலாது என்ற முடிவுக்கு வந்து சோம்பேறியாகி



விடும். ஆகவே குழந்தை எந்தத் துறையில் ஆர்வமாக உள்ளதோ அதில் தன் திறமைகளை வளர்த் துக்கொள்வதற்கு உதவ வேண் டியது முக்கியம். அப்போதுதான் அது தன் முயற்சிகளை முடக்கிக் கொள்ளாமல் தொடர்ந்து ஆர்வத்துடன் செயல்படும்.


டாக்டர் கு.கணேசன்



உலகிலேயே அழகான நாடு!

நம் எல்லோருக்கும் 'ஸ்விட்சர்லாநது' என்றதும் நினைவுக்கு வருவது திரைப்படப் பாடல்களின் பின்புலத்தில் வரும், ஸ்விஸின் ஆல்ப்ஸ் சிகர பனிக்குவியல் நிறைந்த அழகு நகரம்தான்! ஸ்விஸின் கலைநயம் மிக்க, நுணுக்கமான கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள், சிறப்புக் காவல் படை, வங்கி அனைத்துமே 'ஸ்விஸ்' நாட்டின் பட்டப் பெயரோடு இணைத்தே அழைக்கப்படும் சிறப்புப் பெற்றவை.

மத்திய ஐரோப்பாவில், நிலப் பரப்புகளால் மட்டுமே சூழப்



போவோமா புது உலகம்!





ஃபிரான்சும் எல்லைகளாக உள்ளன. ஸ்விஸின் தலை நகர் பெர்ன்! பெரிய நகரம் 'ஜூரிச்'. உலகில் மலைகள் நிறைந்த நாடுகளில் இது வும் ஒன்று. இதன் 75% பகுதிகள் ஆல்ப்ஸ் மலைச்



பட்டது ஸ்விட்சர்லாந்து! இதன் பரப்பு 41,285 ச.கி.மீ. இந்தியாவில் 1/70 பகுதி. இதன் வடக்கே ஜெர்மனியும், கிழக்கே ஆஸ்திரியா, லிச்டென் ஸ்டெய்ன் நாடுகளும் தெற்கே இத்தாலியும் மேற்கே





மோகனா

சிகரங்களாலேயே அமைக்கப்பட்டுள்ளன. ஐரோப்பாவின் மிக உயர்ந்த மலைத் தொடர்களும், சிகரங்களும், ஆழமான பள்ளத் தாக்குகளும் நிறைந்துள்ளது ஸ்விஸ். ஆல்ப்ஸ், ஜுரா மலைப் பகுதிகளுக்கு இடையே 'ஸ்கையிங்' என்னும் 'பனிநடை' நடைபெறும். உலகப் புகழ் பெற்ற 'ஸ்விஸ் கடிகாரங்கள் உருவாவது ஜுரா மலைப் பகுதிகளிலேதான்!

ஆல்ப்ஸ், ஜுரா மலைப் பகுதிகளுக்கு இடையேயுள்ள ஸ்விஸ் நாட்டில், நீண்ட வழித் தடங்கள் பள்ளத்தாக்குகளின் வழியே உருவாக்கப்பட்டுள்ளன. இங்கே அழகிய ஓடைகளும் மனதை மயக்கும் அழகான இயற்கை நீர்வீழ்ச்சிகளும் அமைந்துள்ளன. பெர்ன் நகரின் முக்கிய நதிகள் ரைனும் அதன் கிளை நதிகளும்தான்! மற்றவை ரோன், டிசினோ, இனன் என்பவை! பெரும்பாலும் போக்குவரத்துக்குப் பயன்படுவது இல்லை! ஸ்விஸ் ஏரிகள் நிறைந்த நாடு! ஆல்ப்ஸ் எப்போதுமே பனியால் போர்த்தப் பட்டிருக்கும். குளிர் காலத்தில் பனிப்பொழிவு அதிகம்! ஆல்ப்ஸ் மலைச்சரிவுகளில், பள்ளத்தாக்கில் ஓய்வெடுக்க பல சுற்றுலா மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன. இங்கு வரும் சுற்றுலா பயணிகள் 'பலூனி'ல பறந்து ஆனந்தம் கொள்கின்றனர்.



ஸ்விஸ் மலைகள் நிரம்பிய நாடு என்பதாலும் சீதோஷ்ண நிலை விவசாயத்திற்குச் சாதகமாக இல்லாததாலும், விவசாயம் இங்கு செழிப்பாக இல்லை. அது மட்டுமல்ல கனிமவளம் குறைவாக உள்ள நாடும் ஸ்விஸ்தான் என்றாலும், பலப்பல வகைகளில் 'ஸ்விஸ்' உயர்ந்து, உலக அரங்கில் வெற்றிநடை போடுகிறது.

ஸ்விஸ் மக்கள் ஆல்ப்பைன், நார்டிக், ஸ்லேவிக், டைனாமிக் என்ற மலை இனங்களிலிருந்து வந்தவர்களே! இவையாவும் மொழி இனமே! பீடபூமியில் மட்டும் 62% மக்கள் வாழ்கின்றனர். மக்கள் தொகை மிக மிக மெதுவாகவே அதிகரிப்பதால், வேலை வாய்ப்புகள் நிரம்பி வழிகின்றன. இங்க வேலை தேடி, பிழைப்புக்கு வந்த மக்கள், ஸ்விஸின் மக்கள் தொகையில் 1/5 பங்கு என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

ஸ்விட்சர்லாந்து 23 மாநிலங்கள் அடங்கிய நாடு! இங்கு 14-16ம் நூற்றாண்டின் கலை நுணுக்கங்கள் நிரம்பிய, கட்டடங்

கள் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 'கோத்திக்' எனப் படும் கிறித்தவ திருச்சபை கி.பி 1421-ல் கட்டப்பட்டது. மிகப் பெரிய வணிக நகரம் 'பேசல்'. இது துணி, ஆடைகள் உற்பத்திக்குப் பெயர் போனது! ஜெனிவா, கலாசார மற்றும் பொருளாதார, பணம் பண்ணும் மையமாகும்! நகைகளும் கடிகாரங்களும் இங்குதான் செய்யப்படுகின்றன!

ஸ்விஸ் நாட்டில் வாழ்பவர்கள் பெரும்பாலும் கிறித்தவர்களே! அலுவலக மொழிகள் ஜெர்மன், ஃபிரெஞ்சு, இத்தாலி, நாலாவது தேசிய மொழி ரோமான்ஷ். நாளிதழ்கள் பெரும்பாலும் ஜெர்மன் மொழியிலேயே அச்சடிக்கப்படுகின்றன.

ஸ்விஸ் நாட்டில் பல நூற்றாண்டுகளாக, 'மோயா' ஆற்றுப் பள்ளத்தாக்கில், 'யோடலிங்' என்ற இசை, அம்மக்களிடையே இசைக்கப்படுகிறது. இது உரத்த குரலிலும், மெல்லிய குரலிலும் மாற்றி, மாற்றி பாடும் பாடலாகும். ஆண்கள் பால் கறக்கும் போதும், வெளியிடங்களுக்குச் செல்லும்போதும், பெண்கள் வயல்வெளியிலும், வீட்டு வேலைகள் செய்யும்போதும், இப்பாடல்களைப் பாடுகின்றனர். இங்குள்ள கலாசாரம் ஜெர்மன், இத்தாலிய கலாசாரம் இணைந்ததாகும்! இருந்தாலும் தனித்தன்மை வாய்ந்தது.

ஸ்விட்சர்லாந்திலிருந்து ஏற்றுமதியாகும் சுவர் கடிகாரம், மேஜை கடிகாரம், கைக்கடிகாரம், கனரக பொறியியல், இயந்திர பொருட்கள், ஜெனரேட்டர், டர்பைன், உணவுப் பொருட்கள், துணிகள், வேதிப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், இசைப் பெட்டிகள், தையல் வேலைப்பாடு மிகுந்த துணிகள், லேஸ்கள், செதுக்கிய மரச் சிற்பங்கள் என உலகப் புகழ் பெற்றவை! ஸ்விஸின் வணிகம் ஏற்றுமதிமூலம்தான்!



"நீ டீ.வி சீரியல் பார்க்கும் போது மூச்சு வாங்குறியே ஏன்?"

"ஏன்னா நான் சீரியல் லேயே மூழ்கிடுவேன், அதான்!"

– சி. செ. ரங்கசாமி,
பதினோராம் வகுப்பு,
அ.ஆ.மே.நி. பள்ளி, எடப்பாடி

உலகின் மிகப் பெரிய பண மையங்களில் ஒன்று 'ஸ்விஸ்'. இதன் நாணயம் ஸ்விஸ் 'ஃப்ராங்க்'. இங்குள்ள சர்வதேச ஸ்விஸ் வங்கியில், இந்த உலகில் வாழும் யாரும் பணம் போடலாம்; எடுக்கலாம். அவர்களின் கணக்கும் செலாவணியும் மிகவும் ரகசியமாக வைக்கப்படும்! ஸ்விஸ் அரசின் முக்கிய வருமா



னம் இவ்வங்கிகளிலிருந்துதான்! 'ஜூரிச்' தான் நாட்டின் முக்கிய 'வங்கி மையம்'




ஸ்விஸில் அனைத்து ஆண்களும், 20 முதல் 42 வயது வரை கட்டாயமாக இராணுவத்தில் பணி புரிய வேண்டும். ஆனால் இங்கு நிரந்தர இராணுவம் கிடையாது. தேவைப்படும்போது அழைத்தால், அனைவரும் இராணுவத்திற்கு வந்து விடுவார்கள்.

ஸ்விஸ் நாட்டின் போக்குவரத்தில் பெரும்பகுதி, புகைவண்டிப் பயணம்தான்! புகைவண்டிகள் மலையைக் குடைந்து, குகை வழிப்பாதையிலும் செல்கின்றன. உலகின் மிக நீளமான ரயில் குகைப் பாதை ஆல்ப்ஸ் மலையைக் குடைந்து 16.5 கி.மீ நீளத்துக்கு உள்ளது.

'ஸ்விஸ் சீஸ்' உலகப் புகழ் பெற்றது. ஸ்விஸின் பால் உற்பத்தியில் 25% வீடுகளுக்கும், மீதி 75% வெண்ணெய், சீஸ், கெட்டிப்பால், சாக்லேட் போன்றவை தயாரிக்கப் பயன்படுகின்றன. ஸ்விஸ் நாட்டினர் கால் நடை வளர்ப்பில் கை தேர்ந்தவர்கள். 'ஸ்விஸ் சீஸ்' கி.மு 50களிலிருந்தே தயாரிக்கப் படுகிறது!









குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்:

1. தினசரி பத்திரிகை (4)

4. முருகனின் கையில் இருப்பது (2)

7. பயிர்களுக்கு நடுவில் வளரும் தேவையற்ற செடி (2)

8. படகு போன்று நீர் நிலைகளைக் கடக்க உதவுவது (3)

10. நாம் செய்யும் ________யில் கவனமாக இருக்க வேண்டும் (2)

12. அறிவு (2)

13. காலணி. வேறு பெயர் (4)

வலமிருந்து இடம்:

2. இது தின்னக் கூலியா? (4)

3. கல்லைச் செதுக்க கிடைப்பது (2)

5. பயிரைப் பாதுகாப்பது (2)

9. உணவை மெல்லப் பயன் படுவது? (2)

11. நெல்லை அரைக்க மிஞ் சுவது (2)

14. வேதாளம் மீண்டும் இந்த மரத்தில் ஏறியது (4)

மேலிருந்து கீழ்:

1. இதில் நாம் உட்காரலாம் (4)

2. ஆணை (4)

6. வீட்டைப் பாதுகாப்பது, மரத் தால் செய்யப்பட் டிருக்கும் (3)

11. இது இல் லாத பண்டம் குப்பையிலே (3)

12. இவர்களாய் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டும் என் றார் கவிமணி (3)

கீழிருந்து மேல்:

3. குங்குமம் வைப்பதற்குப் பயன்படும் மங்கலப் பெட்டகம் (3)

4. மருத்துவ குணங்கள் நிறைந்த ஒரு மரம் (3)

13. வீடு கட்ட உதவுவது (4)

14. தமிழகத்தின் யானைகள் சரணாலயம் (4)

- கே. கலா, மன்னார்குடி

விடை 95 ம் பக்கம்



உலகின்

ஜப்பான் நாட்டு மொழியில் 'ஓய்வு' என்ற சொல்லே இல்லை.

மெக்காலே எட்டு வயதில் உலக வரலாற்றை எழுதினார்.

தூத்துக்குடியின் பழைய பெயர் முத்து நகர்.

தாவரங்கள் தோன்றி 43 கோடி ஆண்டுகள் ஆகின்றன.

- ஏ.எல். பாத்திமா, காரைக்கால்



போப்பாண்டவருக்கென்று தனியாக ஒரு வானொலி நிலையம் உண்டு. வானொலியைக் கண்டுபிடித்த மார்க்கோனி அமைத்துத் தந்த வானொலி நிலையம் இது.

சிலி நாட்டில், பெண்களே பெண்களுக்காக நடத்தும் வானொலி நிலையம் 1991-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மற்ற வானொலி நிலையங்கள் ஒலிபரப்ப மறுக்கும், பிரச்ணைகுரிய பெண்கள் சம்பந்தப்பட்ட விஷயங்கள் அனைத்தையும் 'ரேடியோ பியாரா' எனப்படும் இந்தப் பெண்கள் வானொலி ஒலி பரப்புகிறது.

ஹாங்காங்கில் இராணுவத்திற்காக மட்டும் தனியாக ஒரு வானொலி நிலையம் செயல்படுகிறது.

- சக்கரத்தாழ்வார்,
தூத்துக்குடி

உலகிலுள்ள அத்தனை மண்ணும் ஒரு முறையாவது மண்புழுவின் வயிற்றுக்குள் போய் வந்திருக்க வேண்டும். இதனால் அரிஸ்டாட்டில் இதை 'உலகின் குடல்' என்று அழைத்தார். 1981ல் மண்புழுவிற்காக பிரிட் டிஷ் அரசு விழா நடத்தியது.

- நெ. இராமன், சென்னை

ஒரு நாட்டின் கடற்படையைச் சேர்ந்த இரு கப்பல்கள் நடுக்கடலில் சந்தித்துக் கொள்ளும்போது, ஒரு கப்பலிலிருந்து இன்னொரு கப்பலுக்கு அத்தியாவசியப் பண்டங்களையோ அல்லது மற்ற பொருள்களையோ



மாற்றிக் கொள்ளும் முறை 'ஜாக்-ஸ்டே' என்று அழைக்கப்படுகிறது.

- என். ஜரினாபானு,
திருப்பட்டினம்





தேனீக்கள் தேனைச் சேகரிக்க, ஒரு மலரிலிருந்து மற்றொரு மலருக்கும், மீண்டும் கூட்டிற்கும் பல முறைகள் பறக்கின்றன. இப்படி மலர்களுக்கும் கூட்டுக்கும் பறந்து பறந்து தேனைச் சேகரிக்கும் தேனீக்கள் 500 கிராம் தேன் சேகரிப்பதற்கு சுமார் 75,000 கிலோமீட்டர் தூரம் பறக்கின்றன.

- மு. பெரியசாமி,
விட்டுக்கட்டி

முதலையின் முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளி வருவதற்கு முன் ஓர் அதிசயம் நிகழ்கிறது. முதலை முட்டைகள் மணலில் ஓர் அடி ஆழத்தில் புதைந்திருக்கும். அவை முட்டையை உடைத்துக்கொண்டு வெளி வருவதற்கு முன்பே தாய் முதலையைக் கூப்பிடத் தொடங்கி வருகின்றன. தாய் முதலைகள் இதற்காகவே காத்திருக்கின்றன. அவை உடனே ஓடி வந்து பள்ளம் தோண்டி முட்டைகளை வெளிப்படுத்தியவுடன் குஞ்சுகள் ஓட்டை உடைத்துக் கொண்டு வெளியே வருகின்றன.

- ம. சந்தோஷ், ஐந்தாம் வகுப்பு,
சிவகாசி அரிமா மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
சிவகாசி





"சத்தம் போடாதே. என் கையில் வைத்திருக்கும் துப்பாக்கி பேச ஆரம்பித்து விடும் ஜாக்கிரதை." மூவரையும் காரில் அடைத்து, ஒரு கயிற்றினால் அவர்கள் கைகளைக் கட்டி விட்டு காரை வேகமாக ஓட்டினான் ரஹீம்.

ராஜுவும் அப்துல்லாவும் போகும் வழியை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினர். நிறைய நேரம் காரில் பயணம் செய்து, ஒரு வீட்டின் அருகில் ரஹீம் காரை நிறுத்தினான்.

"ம்... இறங்குங்க" ரஹீம் மிரட்டியவுடன், மூவரும் கைகள் கட்டப்பட்டிருந்ததால், தட்டுத் தடுமாறி இறங்கினர். அந்த வீடு ஒரு அத்துவானக் காட்டில் இருந்தது. மூவரையும் ஓர் அறையில் தள்ளினான். பிறகு மூவரையும் தனித்தனியாகப் பெரிய கயிற்றால் கட்டினான்.

"ரஹீம், என் அக்கா ஏதும் அறியாத பெண். அவளை விட்டுவிடு" என்று ராஜு கெஞ்



காந்தலக்ஷ்மி சந்திரமௌலி



மர்மப் புத்தகம்!

சினான். ரஹீம் எதையும் கேட்கும் நிலையில் இல்லை.

''இங்கேயே கிடந்து அவதிப் படுங்கள். அப்பொழுதுதான் புத்தி வரும்'' என்று ரஹீம் மிரட்டும் குரலில் கூறினான்.


''எங்களை ஏன் கடத்தினாய்? ஏற்கெனவே உன்னை போலீஸ் தேடுகிறது. நீ மேலும் குற்றம் புரிந்தால் ஆபத்தல்லவா?'' என்று ராதிகா கேட்டாள்.

''ஹா...ஹா... உனக்கா ஒன்றும் தெரியாது? நீ அதிபுத்தி சாலி. உன்னை வெளியில் விட்டால் ஆபத்து. அக்பருக்கு உங்கள் மேல் பாசம் அதிகம். உங்களைப் பணயக் கைதிகளாக வைத்தால்தான் நான் அக்பரிடமிருந்து தப்ப முடியும். அது மட்டுமல்ல அந்தப் புத்தகம் எனக்கு வேண்டும். இல்லையென்றால் கொள்ளைக் கூட்டத்தின் தலைவர் என்னைக் கொன்று விடுவார். அந்தப் புத்தகம் எங்கே? உடனே பதில் சொல்'' ரஹீம் மிரட்டினான்.

''புத்தகமா? எந்தப் புத்தகம்? எனக்கு ஒன்றும் தெரியாதே. ஐயோ... அம்மா... அப்பா'' என்று பெருங்குரலில் ராதிகா அழத் தொடங்கினாள்.

''ஏய்... உஷ்... சத்தம் போட்டால் அடித்து நொறுக்கி விடுவேன்'' என்று ரஹீம் கூறும் பொழுது, யாரோ வாசல் கதவு தட்டும் சத்தம் கேட்டது.

ரஹீம் அறையை விட்டு வெளியே சென்றவுடன் ராதிகா அவசரமாக அப்துல்லாவிடம், ''திரும்பி உட்கார் அப்துல்லா. நான் தரையில் படுத்தபடி,



8

எப்படியாவது என் பல்லால் கடித்து கயிற்றின் முடிச்சை அவிழ்க்கிறேன்'' என்றாள்.

ராஜு ஆச்சரியத்துடன் ''ராதிகா, நீ அழுது ஆர்பாட்டம் செய்த உடன், நீ பயந்து விட்டாய் என்று நினைத்தேன். அதெல்லாம் நடிப்பா?'' என்றான்.

''பெண்கள் நாங்கள் அதி புத்திசாலிகள். எங்களுக்கு ஒரு ஆபத்து என்றால் சாம, தான, பேத, தண்ட முறைகளில் காத்துக் கொள்ள எங்களுக்குத் தெரியும்'' என்று ராதிகா பெருமையுடன் கூறினாள்.

ராதிகா, தரையில் படுத்த படி, மிகவும் சிரமப்பட்டு, தன் பல்லால் கடித்து, இழுத்து, முடிச்சுகளை அவிழ்த்தாள். அப்துல்லா உடனே ராதிகாவின் கட்டுகளையும், ராஜுவின் கட்டுகளையும் அவிழ்த்து விட்டான்.

பிறகு அறையின் மூலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த தினசரித் தாள்களை எடுத்து கிழிக்க ஆரம்பித்தான். ''ஐயோ, என்ன இது? அப்துல்லா அதிர்ச்சியில் உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? பேப்பரை கிழிக்கிறாயே'' என்று ராஜு கேட்டான்.

''இல்லை ராஜு, நான் ஓரிகாமி எனும் பேப்பரில் செய்யும் ஜப்பானிய கலையை, என் பள்ளியில் கற்றுள்ளேன். அதில் நம்மைச் சூழ்ந்துள்ள ஆபத்தை உணர்த்தும் வண்ணம் பொம்மைகள் செய்து, அதோ உயரமாக உள்ள அந்த ஜன்னல் வழியாக வெளியே வீசுகிறேன். யாராவது பார்த்து கட்டாயம் நமக்கு உதவி செய்வார்கள்'' என்றான் அப்துல்லா.

''அரேபிய மொழியில் எழுதி, வெளியில் காகிதத்தை வீசினால், நம் நிலைமையைச் சுலபமாக எடுத்துக் கூறலாமே'' என்று ராதிகா கேட்டாள்.

''எனதருமை அக்காவே, உன்னிடம் பேனா இருந்தால் கொடு. நான் எழுதுகிறேன்'' என்றான் ராஜு.

''சரி, சரி ஏதோ ஞாபக மறதியில் சொல்லிவிட்டேன். அதற்காக ரொம்ப கிண்டலடிக்கத் தேவையில்லை'' என்று ராதிகா சொன்னாள். அப்துல்லா வெகு விரைவாக ஏதேதோ பொம்மைகளைச் செய்தான். ''இதோ, இது பட்டாம் பூச்சி. சிறகுகளை வெட்டியிருக்கிறேன். இது வீடு. இதனை ஒரு ஜெயில் போல் செய்திருக்கிறேன். ஓரிகாமி

யார் இந்தப் பிரபலம்?



பகுத்தறிவுக் கருத்துகளைத் தன் கவிதைகளில் முன் வைத்தார்.

படித்தவர்கள், இந்தச் சிறகொடிந்த பட்டாம்பூச்சி ஜெயிலுக்குள் இருப்பதைப் பார்த்து புரிந்துகொள்வார்கள்'' என்றான்.

''ஒரிகாமியைப் பற்றி கூறேன். நானும் கற்றுக் கொள்கிறேன்'' ராதிகா ஆவலுடன் கேட்டாள்.

''இது சைனாவில் தோன்றியது என்றும் இல்லை இது ஒரு ஜப்பானிய கலை என்றும் விவாதங்கள் நடைபெறுகின்றன. 'ஒரு' என்றால் மடிப்பது. 'காமி' என்றால் பேப்பர் என்று ஜப்பானிய மொழியில் அர்த்தம்'' என்றபடி ராஜூவை சுவரருகில் நிற்க வைத்து அவன் தோள் பட்டையின் மேல் ஏறினான். பிறகு கைகளை எட்டும் வரை நீட்டி செய்துள்ள பொம்மைகளை வெளியில் எறிந்தான்.

பிறகு ''இதோ பாருங்கள், உங்கள் மனதை மகிழ்விக்க இந்தக் காகித தொப்பி செய்கிறேன்'' என்றான். அதை அணிந்து ''இது இஸ்லாமிய தொப்பி. இதோ இப்படி மடித்தால் இது காந்திய தொப்பி. இதோ இது போலீஸ் தொப்பி. இதோ இப்படி மடித்தால் இது மிலிட்டரிக்காரரின் தொப்பி'' என்று விதவிதமாகச் செய்து காட்டினான்.

உள்ளே இருக்கும் இவர்களுக்குத் தெரியாமல், வெளியே ஒரு ஜப்பானிய தம்பதி கீழே கிடந்த 'ஒரிகாமி' பொம்மைகளைப் பார்த்தபடி நின்றனர். அந்த ஜப்பானிய பெண், ''இது யாரோ குழந்தைகள் செய்தது.



ஓவியப் போட்டி

இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: **வயல்வெளி.**

தைமாதம் அறுவடை காலம். வயல்களில் நெற்கதிரை அறுவடை செய்வது, போர் அடிப்பது, மாட்டு வண்டியில் ஏற்றுவது என உங்கள் கற்பனைக்கு ஏற்ப வண்ணத்தில் ஓவியத்தை வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி: **9.12.2005**

ஐயோ! இது என்ன கொடுமை? குழந்தைகள் ஏதோ ஆபத்தில் சிக்கியுள்ளனர். நாம் உடனே போலீஸுக்குத் தகவல் கொடுக்க வேண்டும்'' என்று கூறினார்.

உடனே ஒரு டாக்ஸியில் விரைந்து, அவர்கள் ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றனர். அதே சமயம் குழந்தைகளைக் காணவில்லை என்று ரஹீமுடன் விமலாவும் சங்கரனும் போலீஸ் ஸ்டேஷனில் உதவி கேட்க வந்திருந்தனர்.

(அடுத்த இதழில் முடியும்)



நீங்கள் கால்ஃப் (*Golf*) விளையாட்டைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பொதுவாக, பணக்காரர்களின் விளையாட்டு என்றே அறியப்பட்டிருக்கும் கால்ஃபை, பொழுது போக்காக விளையாடுகிறவர்களும் உண்டு. அதையே முழு நேர வேலையாக எடுத்துக் கொண்டு மூழ்கிக் கிடக்கிறவர்களும் உண்டு.

அற்புதமான பச்சைப்பசேல் மைதானங்களில் விளையாடப்படும் இந்த விளையாட்டை இப்போது நாம் உட்கார்ந்த இடத்தில் ஓடாமல் விளையாடிப் பார்க்கலாம்.

ஓடாத டென்னிஸைப் போலவே இதுவும் இரு ந(ண்)பர் ஆட்டம்தான். அதேபோல், இங்கேயும் சில வித்தியாசமான விதிமுறைகள் உண்டு. இந்தமுறை நாம் சோதிக்கப்போவது உங்களுடைய கணித அறிவை.

உங்கள் வீட்டில் பழைய தினசரி காலண்டர் காகிதங்கள் இருக்கும். அவற்றில்



விளையாட்டு


ஓடாமல் கால்ஃப்!

என்.சொக்கன்

ஒரு நூறு காகிதங்களைச் சேகரித்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் வெள்ளைக் காகிதங்களைத் துண்டுதுண்டாக வெட்டிக் கொண்டாலும் சரிதான்.

இந்தக் காகிதங்களில், ஒன்றிலிருந்து நூறு வரை எண்களை எழுத வேண்டும். பிறகு அவற்றை ஒரு அட்டைப் பெட்டியில் போட்டு விட வேண்டும்.

அடுத்து, கால்ஃப் ஆட்டக்களம் வரைந்து கொள்ள வேண்டும். இது ரொம்ப சுலபம். ஒரு நீண்ட சதுரம் அல்லது வட்டம் வரைந்து அதனுள் சின்னச் சின்னதாக இருபது வட்டங்களை வரைந்து கொள்ளுங்கள். வட்டங்கள் திசைக்கொன்றாகச் சிதறிக்கிடக்கட்டும். அவற்றில் ஒன்றிலிருந்து இருபதுவரை எண்களை நிரப்புங்கள். உங்கள் மனம் போன போக்கில் எண்களை எழுதலாம். ஆனால், இருபது எண்களும் ஒரே ஒரு முறைதான் அங்கே இருக்க வேண்டும்.



இப்போது நீங்களும் உங்கள் நண்பரும் வழக்கம் போல் எதிரெதிரே அமர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கிடையே நீங்கள் வரைந்த கால்ஃப் களத்தை விரித்துக் கொள்ளுங்கள். இன்னொரு பக்கத்தில் காகிதத் துண்டுகள் கிடக்கும் பெட்டியை வைத்துக் கொள்

ளுங்கள். எப்போதும்போல் உங்கள் இருவரில் யார் முதலில் விளையாடுவது என்று பூவா, தலையா போட்டுத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

இப்போது பெட்டியை ஒரு முறை நன்றாகக் குலுக்கிவிட்டு, பூவா, தலையாவில் வென்றவர் அதிலிருந்து மூன்று சீட்டுகளை எடுக்க வேண்டும். அவற்றில் மூன்று வெவ்வேறு எண்கள் எழுதப்பட்டிருக்கும் இல்லையா?

அடுத்து அந்த மூன்று எண்களையும் ஏதேனும் ஒரு வரிசையில், ஒரு காகிதத்தில் எழுதிக் கொள்ள வேண்டும். அவற்றினிடையே கூட்டல் (+), கழித்தல் (-), பெருக்கல் (X), வகுத்தல் (÷) இவற்றுள் ஏதேனும் சில குறிகளை இட்டு அவற்றை ஒரே எண்ணாகச் சுருக்க வேண்டும். இந்த ஒரே எண் இருபதுக்குள் இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியம்.

யார் இந்தப் பிரபலம்?




இவரது
தந்தை கனகசபை,
தாயார் மகாலட்சுமி.

உதாரணமாக நீங்கள் எடுத்த எண்கள் 88, 18, 7 என்று வைத்துக்கொள்வோம். இந்த மூன்று எண்களையும் கணிதக் குறிகளைச் சேர்த்து இப்படி எழுதலாம்.

88 -18 / 7
88 - 18 = 70
70 / 7 = 10

இப்போது இருபதுக்குள் ஒரு எண் வந்துவிட்டதல்லவா? உங்கள் கால்ஃப் களத்தில் '10' என்கிற அந்த எண்ணுடைய வட்டத்தின்மீது ஒரு பெருக்கல் குறியோ, அல்லது உங்களுடைய அடையாள எழுத்தையோ எழுதிக் கொள்ளுங்கள். (பின்னர், உங்கள் நண்பர் இதேபோல் மூன்று எண்களை வைத்து விளையாடி வேறொரு புதிய எண்ணைக் கண்டறியும்போது, அவருடைய வட்டத்தின்மீது அவருடைய அடையாள எழுத்தையோ / கூட்டல் குறியையோ எழுதுவார். (காண்க)



இப்போது, அந்த மூன்று சீட்டுகளையும் பெட்டியினுள் போட்டுவிட்டு குலுக்கி மேலும் மூன்று சீட்டுகளை எடுங்கள். இப்போது வந்திருக்கும் எண்கள்: 35, 42, 80. இவற்றை என்ன செய்யலாம்?

80/42-35
42-35=7
80 / 7 = 11.43

சரியாக வரவில்லைதானே?

வேறுவிதமாக முயன்று பார்ப்போம்.

80 - 42 - 35

80 - 42 = 38

38 - 35 = 3

இப்போது இருபதுக்குள் எண் வந்தாகிவிட்டது!

இப்படி எந்த மூன்று எண்களையும் மாற்றிப் போட்டு புத்திசாலித்தனமாக விளையாடினால் (கால்குலேட்டர் இல்லாமல் விளையாடினால் இன்னும் விசேஷம்!) இருபதுக்குள் ஓர் எண் வர வேண்டும். ஆனால், அந்த எண், இந்த ஆட்டத்தில் ஏற்கெனவே வந்த (அதாவது, கால்ஃப் களத்தில் ஏற்கெனவே பெருக்கல் அல்லது கூட்டல் குறியிடப்பட்ட) எண்ணாக இருக்கக்கூடாது என்பதுதான் ஒரே விதிமுறை. அப்படி ஒரே எண் மீண்டும் வந்தாலோ, அல்லது இருபதுக்குள் ஒரு எண்ணைக் கொண்டுவர முடியாவிட்டாலோ, அவருடைய ஆட்டம் முடிந்துவிட்டதாக அர்த்தம். அடுத்த வாய்ப்பு இன்னொரு ஆட்டக்காரருக்குச் சென்று விடும்.

உதாரணமாக நமது கால்ஃப் களத்தில் நாம் ஏற்கெனவே பத்து, மூன்று என்கிற இரு எண்களையும் பெருக்கல் குறியிட்டு மறைத்துவிட்டோம் என்று வைத்துக் கொள்வோம். மறுபடி வேறு சில எண்களை வைத்துக் கணக்கிட்டு 'மூன்று' என்று விடை சொன்னால், அது ஏற்கப் படாது. எப்படியாவது அந்தர் பல்டி யடித்து இருபதுக்குள் உள்ள வேறொரு எண்ணைதான் உங்களுடைய கணக்கீட்டின் விடையாகக் கொண்டுவர வேண்டும்.

இப்படியே, ஒவ்வொன்றாகக் கணக்கிட்டு கால்ஃப் களத்திலுள்ள இருபது எண்களையும் பெருக்கல் / கூட்டல் குறியிட்டுத் தீர்க்கவேண்டும். பின்னர், எல்லா எண்களும் தீர்ந்த பிறகு அவற்றில் கூட்டல் குறிகள் அதிகமா, அல்லது பெருக்கல் குறிகள் அதிகமா என்று எண்ணுங்கள். யார் அதிக எண்களை அடித்துத் தீர்த்திருக்கிறார்களோ, அவரே வெற்றி பெற்றவர்.

இரண்டுமே சம அளவில் இருந்துவிட்டால்? இருக்கவே இருக்கிறது இன்னொரு கால்ஃப் ஆட்டம்!



''நண்பா நல்லா இருக்கிறியா?''

"Fine."

''அடப்பாவி, நண்பா நல்லா இருக்கிறியான்னு கேட்ட பாவத்துக்கு Fine கேட்கறியேடா! இது உனக்கே நல்லா இருக்கா?''

- கே. காவேரி பிரசாத்,
பத்தாம் வகுப்பு,
அழகிரி சுரேஷ் அரசு உ.நி.பள்ளி,
ஆலாங்கொம்பு

முள்ளம்பன்றிக்கு 30,000 முட்கள்!

ஆழி




முள்ளம்பன்றி ஒரு 'பாலூட்டி' இனம். முள்ளம்பன்றிக்குட்டி தன் தாயின் வயிற்றில் இருக்கும் போது அதன் முட்கள் மிகவும் மிருதுவாக இருக்கும். எனவே, தாயின் வயிற்றைப் பாதிப்பதில்லை. ஆனால், குட்டி பிறந்த அந்த நிமிடமே அதன் முட்கள் கூர்மையாக, குத்தக் கூடிய அளவுக்கு உறுதியாகி விடும்!



பெண் முள்ளம்பன்றி எப்போதும் கோடைக் காலத்தில், மே மாதத்தில் ஒரே ஒரு குட்டிப் போடும். முள்ளம் பன்றி 12 முதல் 15 ஆண்டுகள் வரை உயிர் வாழும்


முள்ளம்பன்றிகள் பச்சைக் காய்கள், இலைகள், மரப் பட்டைகள், சில வேர்கள், கிழங்கு வகைகள் முதலியவற்றைத் தின்னுகின்றன.





முள்ளம் பன்றிக்கு உப்பு மிகவும் பிடிக்கும். உப்பு ஜாடியைக் கூட அது ஓட்டை போட்டு உப்பைத் தின்று விடும்! மனிதரின் வேர்வை பட்டு, உப்பு ஏறிய கோடரிக் காம்பு, மண் வெட்டிக் காம்பு முதலிய வற்றையும் அது கடித்துத் தின்றுவிடும்!

முள்ளம் பன்றியின் உடலில் சுமார் 30,000 உரோம முட்கள் உண்டு. முட்கள் நிறைந்த அதன் வால் பகுதியால் சடக்கென்று அடித்தால் போதும்; எதிரியின் முகத்திலும் வாயிலும் முள் கற்றைகள் பொத்துக் கொண்டு போய்விடும்! அப்புறம் எதிரி ஓடிவிடும்!





முள்ளம் பன்றியின் முட்கள் எதிரியின் மீது குத்தினால், அவை உடலிலிருந்து அப்படியே கொத்தாகக் கழன்று விடும்! எதிரி, முட்களுடனே ஓடிவிட வேண்டியதுதான்!

முள்ளம் பன்றியின் கூர்மையான முட்களுக்குப் பயந்து, ஒரு சிங்கம் கூடப் பின்வாங்கி ஓடிவிடும்!






முள்ளம்பன்றியின் முட்கள், அதன் உடலில் உறுதியாக இருப்பவை அல்ல. ஆபத்து வரும்போல் தெரிந்தால், அது தன் உடலைச் சிலிர்த்து உதறினால், அதன் முட்கள் நாலா பக்கமும் சிதறித் தாக்கும்!

காட்டு வாசிகள் முள்ளம்பன்றியின் முட்களை அம்புகளில் இணைத்துச் சிறு பிராணிகளை வீழ்த்தப் பயன் படுத்துகிறார்கள்!





முள்ளம்பன்றியால் நீந்த முடியாது. ஆனால், உரோம முட்கள் அடர்த்தியாக இருப்பதால், அது நன்றாக மிதக்கும் நீரிலும் அமிழ்ந்து விடாது!

நீங்கள் மிகவும் விரும்பும் கோகுலம் உங்கள் வீடு தேடி வர கோகுலம் சந்தா செலுத்துங்கள்.



பெயர்: ....

முகவரி: ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 72/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

அன்புடன்...



புதிர் உலகம், பாப்கார்ன் பிட்ஸ், விடுகதைகள், ஜோக்ஸ், குறுக்கெழுத்துப் போட்டி, ஜக்கு பதில்கள் என ஆறு பகுதிகளும் அறுசுவை! கோகுலம் குருகுலம் என்றால் மிகையாகாது!

- ரா. ஹரிபிரசாத், தமிழ்நாடு


தீபாவளி பற்றிய டிப்ஸ்கள் அனைத்தும் அப் பண்டிகையின் சிறப்புகளை அறிய உதவியது. தொகுத்து வழங்கிய சின்னஞ்சிறு கோபு அவர்களுக்கு நன்றி. துப்பறியும் மோப்ப நாய்கள் பற்றிய தகவலைப் படித்து பிரமிப்படைந்தேன்!

- டி. முருகேசன், திருவாரூர்

இந்த மாதம் அட்டைப்படம், காமிக் கதை, தீபாவளி சிரிப்பு, தீபாவளி ஸ்வீட், தீபாவளி விளையாட்டு என அனைத்துமே ஸ்பெஷலாகவும் மனதிற்கு நிறைவாகவும் இருந்தன. இந்த மாதம் 'மனமே நலமா' இடம் பெறாதது சற்றுக் குறையாக உள்ளது.

- மு. கார்த்திக், நெய்வேலி - 3

கோகுலம் குருகுலம்!



மகிழ்ச்சியான தீபாவளி விளையாட்டு சிறியவர்களுக்கு மட்டும் அல்ல, பெரியவர்களுக்கும் பயன் உள்ளதாக இருந்தது.

- எஸ். ஆறுமுகம், கடுகுமலை

காமிக் கதைகள் உருவான கதை, மர்மப்புத்தகம், ஜக்கு பதில்கள் அத்தனையும் தித்திப்பு என்றால் ஒரே தித்திப்பு! ஜனநாயகத்தின் பிறப்பிடம் நன்று. நெப்போலியன் உலகம் போற்றும் மாவீரன் மட்டுமல்ல நன்றி மறவாத சூப்பர் மனிதனும்கூட.

- ரா. பாரதி, ரா. மது, ரா. ஹரி, மாடம்பாக்கம்



முதல்வன் மணிகண்டன்!



சென்னை அயனாவரத்தைச் சேர்ந்த மணிகண்டனுக்கு 'அபாகஸ்' என்னும் புதிய முறையிலான கணிதத்தைப் பயிலுவதற்குக் கொள்ளை ஆர்வம். தன் மகனின் ஆர்வத்தைக் கண்களிலேயே புரிந்துகொண்ட மணிகண்டனின் அப்பா அபாகஸ் பயிற்சியைக் கற்றுத் தரும் அலோகா மையத்துக்கு அவரை அழைத்துச் சென்றார்.

அதற்குப் பிறகு என்ன நடந்திருக்கும்? 'அபாகஸ்' கணிதத்தில் முதல் மாணவனாக தேறியிருக்கிறார் தானே என்கிற வினா உங்கள் மனதுக்குள் எழலாம். மிகச் சரி. சமீபத்தில் இந்திய அளவில் நடைபெற்ற 'அபாகஸ்' போட்டியில் எட்டாவது லெவலில் டி-பிரிவில் முதலிடம் வென்றது மணிகண்டன்தான். 'வாவ்' என்று மகிழும் முன் இரண்டு விஷயங்களை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு இந்திய அளவில் முதலிடம் பெற்றிருக்கும் மணிகண்டன், ஆரம்பத்தில் தன் தந்தையுடன் அலோகா பயிற்சி



1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

அக்டோபர் இதழில் அறிவித்த போட்டியில் நிறையப் பேர் கலந்து கொண்டு சரியான விடைகளையும் அளித்திருந்தனர். சரியான விடையளித்தவர்களிலிருந்து 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பரிசு யாருக்கு?

1. த. சக்தி, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி, 2. எஸ். அபிநயா, எஸ்.எஸ்.வி. மகளிர் உ.நி.பள்ளி, கொடுமுடி, 3. கே. ராஜேஷ்குமார், தி.மு.இ.வா.அ.ஆ.மே.நி.பள்ளி,



அம்மையார்குப்பம், 4. ஆர். சித்தார்த் சிதம்பரநாதன், ஜெயேந்திரா மெட்ரிக் பள்ளி, திருநெல்வேலி, 5. எஸ். அஸ்வினி, ரோடரி லெஹரி மெட்ரிக் மே.நி. பள்ளி, மதுரை

சரியான விடை:

I. 1. மஹாராஷ்டிரா, 2. 34, 3. ஆம். 4. லிட்டில் மாஸ்டர், 5. ஆம்.

II. 1. தும்பி, 2. வெட்டுக்கிளி, 3. கோளியாத் வண்டு, 4. கரப்பான் பூச்சி, 5. வண்ணத்துப்பூச்சி, 6. அந்துப்பூச்சி.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

மையத்தில் சேர விரும்பியபோது மணிகண்டனைச் சேர்த்துக் கொள்ள மறுத்தனர். காரணம், 'பேர் என்னப்பா?' என்று கேட்ட போதுதான் தெரிந்திருக்கிறது. மணிகண்டனுக்கு காது கேட்காது. சரளமாக மற்றவர்கள் போல் பேச முடியாது என்று.

"காது கேட்கும் திறனில்லாத சிறுவனால் எப்படி கற்றுக் கொள்ள முடியும்?" என்று கேள்வியெழுப்பியவர்களுக்கு இப்பொழுது விடை தந்திருக்கிறார் மணிகண்டன். இதிலுள்ள குறிப்பிடத்தக்க அம்சம், ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட இப் போட்டியில் இவர் மட்டுமே குறைபாடுள்ள மாணவர்.

அயனாவரத்திலுள்ள இவரது வீட்டுக்குச் சென்றோம். மணிகண்டனை அருகில் அமர வைத்து மெல்லப் பேச ஆரம்பித்தார் அவரது தந்தை முருகன்.

"இவன் படிப்புல படுசுட்டி. இதனாலேயே ஏழாவதிலிருந்து டபுள் ப்ரமோஷனாகி ஒன்பதாவது வகுப்புக்குத் தாவினான். எப்பவும் கணிதத்துல சென்டம் தான் வாங்குவான். மணிச்சட்டம் மூலமா புதுமையாகக் கணிதத்தைக் கற்றுத் தரும் அபாகஸைக் கத்துக்கறதுக்காகப் போனவனை அவ்வளவு சுலபமாகச் சேர்த்துக்கலை. ஆனா இன்னைக்கு எல்லோருக்கும் பெருமை தேடித் தந்துட்டான்" என்று மகனின் தலை முடியைக் கோதி விடுகிறார்.

அண்ணாநகர் மேற்கிலுள்ள அஜய் காது கேளாதோர் உயர்நிலைப் பள்ளியில் பத்தாவது

படிக்கும் மணிகண்டன் சிறந்த செஸ் ப்ளேயரும்கூட. இந்தூரில் நடந்த அகில இந்திய அளவிலான காது கேளாதோர் செஸ் போட்டியில் இரண்டாவது இடம் பிடித்திருக்கிறார்.



• பெற்றோருடன் மணிகண்டன்

திறமைசாலியாக இருப்பவரை ஏன் காது கேளாதோர் பள்ளியில் சேர்த்தீர்கள்?

மற்ற பள்ளிகளில் கவனிப்பு சரியா இருக்காது. காது கேளாதோர் பள்ளின்னா இவங்களுக்கு ஏத்த மாதிரி பாடம் நடத்துவாங்க. ஒரு வகுப்புக்குப் பத்து பேர்தான் இருப்பாங்க. சைகை மொழியிலும் பாடம் நடத்துவாங்க. மணிகண்டன் அங்கே தமிழ் மொழியிலதான் பாடம் கத்துக்கறான். காது கேளாதோர் ஏதாவது ஒரு மொழியைக் கத்துக்கிட்டா போதும்னு அரசாங்கம் சொன்னதால இவனுக்குத் தெரிஞ்ச ஒரே மொழி தமிழ்தான்.

தன் குறைபாடால் அவருக்கு ஏதாவது மன வருத்தங்கள் உண்டா?

மிகவும் தன்னம்பிக்கை கொண்டவன். தன் குறைகளையெல்லாம் மறந்து திறமைகளை வளர்த்துக் கொள்வதில் முனைப்பாக இருப்பான். தெரபி மூலம் மெல்ல மெல்லப் பேசக் கற்று வருகிறான். தனியே எல்லா இடங்களுக்கும் போய் வருவான். அவன் அண்ணன் சுவாமிநாதன் தான் அவனுக்கு இன்ஸ்பிரேஷன். சுவாமிநாதனுக்கும் இதே குறைபாடுகள் இருந்தும் தமிழ் - இங்கிலீஷ் டைப்ரைட்டிங் தேர்வில் டிஸ்டிங்க்ஷன் வாங்கியிருக்கிறார்.

அரசிடமிருந்து ஏதேனும் உதவிகள் கிடைக்கிறதா?

எதுவும் கிடையாது. நாங்கள் எதுவும் எதிர்பார்ப்பதில்லை. இருப்பினும் காது கேளாதோர் பத்தாவது, +2 தேர்வுகள் எழுதும் போது மற்ற மாணவர்களின் விடைத்தாள்களைப் போலவே இவர்களின் விடைத்தாள்களையும், ஒன்று போல பாவிக்கிறார்கள். இது தவறு. மற்ற மாணவர்கள் போல் சுலபமாகக் காது கேளாதவர்களால் படிப்பில் ஈடுபட முடியாது. இந்த விஷயத்தில் அரசாங்கம் இவர்களுக்கென்று தனி சலுகை வழங்க வேண்டும்.

மணிகண்டனின் கனவுகள்?

செஸ்ஸில் பெரிய ப்ளேயராகணும். இன்ஜினீயரிங் படிக்கணும்.

- ச.ந. கண்ணன்







அந்த ஊரிலேயே கந்தசாமி பண்ணையார்தான் பெரிய பணக்காரர். அவர், தினந்தோறும் காலையில் தன் மனைவி கட்டிக் கொடுத்த சாப்பாட்டை எடுத்துக் கொண்டு களத்துமேட்டுக்குச் செல்வார். அங்கு, வேலையாட்களிடம் அன்று செய்ய வேண்டிய வேலைகளைக் கூறிவிட்டு, மாமர நிழலில் களத்துமேட்டிலேயே உறங்கிடுவார். பின், சூரியன் உச்சிக்கு வந்ததும் சாப்பாட்டை சாப்பிட்டு விட்டு, மீண்டும் உறங்கி விடுவார். மாலையானதும் வீட்டுக்கு வந்து விடுவார்.

எப்போதும் மகிழ்ச்சியாக இருந்து வந்த பண்ணையார், இப்போதெல்லாம் தன்னால் அதிகம் சாப்பிட முடியாததால், மிகவும் கவலைப்படலானார். எப்போதும் ஏழு இட்லிக்குக் குறையாமல் சாப்பிடும் பண்ணையாரால், இப்போது இரண்டு இட்லியைச் சாப்பிடுவதற்கே கடினமாக இருந்தது.

ஒருசமயம் பக்கத்து வீட்டில் இருந்து வந்த வற்றல் குழம்பு வாசம் பண்ணையாரின் மூக்கைத் துளைத்தது. இன்று தன் மனைவியிடம் வற்றல் குழம்பு வைக்கச் சொல்லி ஒரு பிடி பிடிக்க வேண்டும்' என்று நினைத்தார்





பண்ணையார். வாய்க்கு ருசியாக பண்ணையாரின் மனைவி சமைத்து வைத்திருந்தும் பண்ணையாரால், நான்கு வாய்க்கு மேல் சாப்பிட முடியவில்லை.

பண்ணையார் மனைவி, கோபித்துக்கொண்டு தன் அண்ணன் வீட்டுக்குச் சென்றுவிட்டார். பண்ணையாரின் சமாதானத்துக்குப் பின் இரண்டு நாட்களுக்குப் பிறகே வீடு வந்து சேர்ந்தார்.

பண்ணையார் பக்கத்து ஊரில் நடந்த ஒரு திருமணத்திற்குச் சென்றிருந்தார். பண்ணையார் வந்ததும் ஆளாளுக்குப் பண்ணையாரை உபசரித்தனர். அவர்கள் பண்ணையாரை உணவுக்கூடத்திற்கு அழைத்துச் சென்றதும் பண்ணையாரின் வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்தது. அவர்கள் பண்ணை

ஸ்ரீரா.ரவிவர்மன்

யாரின் கைப்பிடித்து சாப்பிட அழைக்க, பண்ணையார் தனக்கு அவசர வேலை இருக் கிறது என்று கிளம்ப... உணவுக் கூடமே அமர்க்களப்பட்டது.

பண்ணையார் ஊருக்கு ஒரு சாமியார் வந்திருந்தார். ஊர் மக்கள் அனைவரும் தங்களது குறைகளைச் சாமியாரிடம் சென்று முறையிட்டனர். பண்ணையாரும் தனது குறைகளை அவரிடம் சென்று முறையிட்டார்.

அதற்குச் சாமியார், "ஊரார் கண் முழுவதும் உங்கள் மீது பட்டுள்ளது. உங்கள் குறையைத் தீர்க்க வேண்டுமானால் அதற்கு பரிகாரம் செய்ய வேண்டும். ஆயிரம் ரூபாய் செலவாகும்" என்றார்.

பண்ணையார், 'எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. தனது குறை தீர்ந்தால் போதும்" என்று ஆயிரம் ரூபாயை சாமியாரிடம் கொடுத்தார். ஆயிரம் ரூபாய் போனதுதான் மிச்சம். பண்ணையாரின் குறை தீரவில்லை.

சூரியன் உச்சிக்கு வந்ததும் களத்து மேட்டில் தூங்கிக் கொண்டிருந்த பண்ணையார் எழுந்தார். வயலில் உழுது கொண்டிருந்த முருகனிடம், "முருகா! உழுதவரைக்கும் போதும். வெயில் வேறு அதிகமாகிவிட்டது. வந்து சாப்பிட்டு விட்டு, கொஞ்ச நேரம் ஓய்வெடுத்து விட்டுப் போ" என்றார்.

முருகன் தூக்குச்சட்டியுடன் வந்து சாப்பிட உட்கார்ந்ததைப் பார்த்த பண்ணையாருக்கு ஆச்சர்யம். அவன் கொண்டு வந்திருந்த தூக்குச்சட்டி சற்றுப் பெரிதாக இருந்தது. முருகன் சாப்பிடச் சாப்பிட பண்ணையார் மேலும் ஆச்சர்யமானார்.

"முருகா! உன்னால் மட்டும் எப்படி இவ்வளவு சாப்பாடு சாப்பிட முடியுது! என்னால் இட்லி சாப்பிடவே கடினமா இருக்கிறது" என்று பண்ணையார் வருத்தத்துடன் முருகனிடம் கூறினார்.

"ஐயா! நான் நன்றாக சாப்பிடக் காரணம் என்கிட்ட இருக்கிற இந்த 'மந்திர ஏர்'தான்" என்று முருகன் தான் உழுத ஏரைக் காட்டினான்.

முருகன் கூறியதைக் கேட்ட பண்ணையார் மேலும் ஆச்சர்யமானார். "உண்மையாகவா?" என்று பண்ணையார் முருகனிடம் கேட்டார்.

இவர்தான் அந்தப் பிரபலம்!



பாரதிதாசன்

- ஜி.எஸ்.எஸ்

'வேண்டுமானால் நீங்களே உழுது பாருங்கள்'' என்று கூறினான்.

முருகனை பண்ணையார், வீட்டிற்கு அனுப்பிவிட்டு, வயலில் தானே சென்று 'மந்திர ஏரால்' உழ ஆரம்பித்தார். என்ன ஆச்சர்யம்! பண்ணையாருக்குச் சிறிது நேரத்திலேயே நன்கு பசிக்க ஆரம்பித்தது. வீட்டிற்குச் சென்ற பண்ணையார் வயிறு முட்ட நன்கு சாப்பிட்டார். இதற்கு முன் பண்ணையார் இவ்வாறு சாப்பிட்டதே இல்லை!

அடுத்தநாள் காலை வேலைக்கு வந்திருந்த முருகனிடம் பண்ணையார், ''முருகா! எப்போதும் கொஞ்சம் சாப்பிடவே கஷ்டப்படும் நான், நேற்று வயிறு நிறைய சாப்பிட்டேன். அதற்குக் காரணம் உன்னுடைய மந்திர ஏர்தான். முருகா! உன்னுடைய மந்திர ஏரை எனக்குத் தந்து விடுகிறாயா?'' என்றார்.

அதற்கு முருகன், ''ஐயா! என்னை மன்னிக்கவும். நான் கூறியது போல் அந்த ஏர் 'மந்திர ஏர்' அல்ல. உங்களை வேலை செய்ய வைக்க வேண்டும் என்பதற்காகவே அது, 'மந்திர ஏர்' என்று பொய் கூறினேன். உங்கள் பசியின்மைக்குக் காரணம் ஏதோ வியாதி அல்ல; உங்கள் உழைப்பின்மைதான்.

''நீங்கள் பெரும்பாலும் ஓடியாடி உழைப்பதில்லை இதனால் நீங்கள் சாப்பிட்ட உணவு சரியாக செரிப்பதில்லை. அதனால் அடுத்தவேளை சாப்பிடும்போது, உங்களால் அதிகம் சாப்பிட முடிவதில்லை. நீங்கள் ஓடியாடி உழைத்தால்தான் நன்றாகச் சாப்பிட முடியும். எனவே, உங்களை வேலை செய்ய வைக்க வேண்டும் என்பதற்காகவே 'மந்திர ஏர்' என்று பொய் கூறினேன்...'' என்று பண்ணையாரிடம் சொன்னான்.

அதற்குப் பண்ணையார் முருகனிடம், ''முருகா! என்னுடைய பசியின்மைக்குக் காரணம் என்னுடைய உழைப்பின்மைதான்னு எனக்கு விளங்க வச்சிட்டே. இனிமே என்னால் முடிஞ்ச வேலையை நானே செய்வேன். ரொம்ப நன்றி'' என்று கூறினார்.




''எவ்வளவு கஷ்டமான ஆபரேஷன்! சக்ஸஸா முடிச்சிட்டீங்க!''

''இதெல்லாம் நம்ம கையிலயா இருக்கு? எல்லாம் ஆண்டவன் கையிலதான்!''

''அப்ப ஆபரேஷன் பீஸை உண்டியல்ல போடட்டுமா டாக்டர்?''

– வி. திலக் ராஜ்குமார்,
ஸ்ரீ சாரதா பாலமந்திர்
ஆண்கள் மெட்ரிக், சேலம்



● என். அன்பரசன், கோபி

? எலும்புகளை வளைக்க முடியுமா ஜக்கு?

முடியாது அன்பரசன். எலும்புகளை வளைக்க இயலாது. கைமுட்டி, கால் முட்டி போன்ற பகுதிகளைத்தான் நாம் வளைக்



கிறோம். அநதப பகுதிகளில் இரண்டு எலும்புகள் சேர்கின்றன. இது 'ஜாயிண்ட்ஸ்' என்று அழைக்கப்படுகிறது.

● கே. ரஞ்சனி, திருவாரூர்

? ஒரு தேனீ எவ்வளவு தேனைச் சேகரிக்கும் என்று சொல் ஜக்கு?

ஓராயிரம் தேனீக்கள் தங்களின் வாழ்நாள் முழுவதும் வேலை செய்து, ஒரு பவுண்ட் தேனைச் சேகரிக்கின்றன. (ஒரு தேனீ எவ்வளவு தேனைச் சேகரிக்கும் என்று கணக்கிட்டுக் கொள்ளுங்கள் ரஞ்சனி!)

● மு. கார்த்திக், நெய்வேலி

? இடி சத்தம் வருவது ஏன் ஜக்கு?

தொடர் எதிரொலிப்பு காரணமாகத்தான் இடி சத்தம் நம் காதில் விழுகிறது. வான் மண்டலத்தில் உருவாகும் காற்றோட்டத்தால் மேகங்கள் ஒன்றை ஒன்று நெருங்கவோ விலகிச் செல்லவோ செய்கின்றன. அப்போது மின்னல் தோன்றிய மேகக் கூட்டத்திலிருந்து எழும் இடி ஓசை, அருகில் நெருங்கும் மேகப் பரப்பில் மோதி எதிரொலிக்கிறது. இந்த எதிரொலி இடி தோன்றிய மேகத்துக்குச் சென்று, பலவீனம் அடைந்து மீண்டும் எதிரொலிக்கும். இவற்றைத் தொடர் எதிரொலிப்பு என்கிறோம். மேகக் கூட்டங்கள் மிக நெருக்கமாக இருக்கும்போது இந்தத் தொடர் எதிரொலிப்புகளைப் பிரித்துக் கேட்க முடியாது. ஆகையால் இடி உருளுவது போலவும், உறுமுவது போலவும் நமக்குக் கேட்கிறது.

● ஆனந்தி, வியாசர்பாடி

? எருக்கு, பலா போன்றவற்றில் பால் வடியக் காரணம் என்ன ஜக்கு?

நீராவிப் போக்கினைக் குறைக்க தாவரங்கள் நீரை திட, திரவப் பொருளாக மாற்றி வைக்கப்படும் தகவமைப் பால்தான் பால் வடிகின்றது ஆனந்தி.

● சி. அஸ்வத், மதுரை

? உங்கள் ஊரில் வெயில் என்று அலுத்துக்கொண்டீயே ஜக்கு, மழை போதுமா?

அன்புள்ள ஜக்கு...



வெய்யிலும் மழையும் நமக்குத் தேவையானவைதான். அதுவே அளவுக்கு அதிகமாகும்போது எவ்வளவு இழப்புகள், கஷ்டங்கள், நஷ்டங்கள்! இந்த ஆண்டு உலகளவில் இயற்கையின் பாதிப்புகள் ரொம்பவே அதிகமாக நிகழ்ந்து விட்டன.


● பி. ஹம்ரிஷ்,
மாதேசம்பாளையம்

? விமானத்தில் பயணம் செய்யும்போது விமானச்சத்தம் உள்ளே இருக்கும் பயணிகளுக்குக் கேட்குமா ஜக்கு?

! கண்டிப்பாகக் கேட்கும் ஹம்ரிஷ். காதைச் செவிடாக்கும்படியான இரைச்சலாக இருக்காது; மெதுவாகக் கேட்கும்.

தேனீ எவ்வளவு தேனைச் சேகரிக்கும்?





மதியச் சாப்பாடு என்ன?

சாப்பாடு?

ஹோம்வொர்க் நோட்டை எங்கேயோ வைத்துவிட்டு, பள்ளிக்கூடம் போகும் அவசரத்தில் தேடிக் கொண்டிருந்தான் என் தம்பி. எங்கு தேடியும் கிடைக்காததால் அம்மாவைத் தேடிக் கண்டுபிடிக்கச் சொல்லிவிட்டு, மதியம் வந்து எடுத்துக் கொள்வதாகக் கூறினான். வழக்கமாக மதியச் சாப்பாட்டை கேரியரில் எடுத்துச் செல்லும் அவன் மதியம் வீட்டுக்கு நோட்டை எடுக்க வரும்போது சாப்பிட்டுக் கொள்ளலாம் என நினைத்து அம்மாவிடம், ''ஹோம்வொர்க் நோட்டை எடுத்து வைங்க. மதியம் வந்து சாப்பிட்டுக்கறேன்'' என்று கிளம்பத் தயாரானான். அம்மா அவனிடம், ''இன்னிக்கு என்ன அதிசயமா ஹோம்வொர்க் நோட்டைச் சாப்பிடப் போறேன்னு சொல்ற. வழக்கமா சாப்பாடுதானே சாப்பிடுவே?'' என்று தமாஷாகச் சொல்ல அனைவரும் சிரித்து விட்டோம்.

- அ. பேச்சியப்பன், ராஜபாளைம்



மாத்திரை!

நான்காம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது ஒருநாள் நந்தினி என்ற மாணவி காய்ச்சல் அடிப்பதாக எங்கள் ஆசிரியரிடம் போய் சொன்னாள். அவள் உடம்பைத் தொட்டுப் பார்த்து காய்ச்சல்தான் என்பதை அறிந்த வகுப்பாசிரியர், பள்ளியிலிருந்த மாத்திரை ஒன்றை எடுத்துக் கொடுத்து, ''சமையல்காரரிடம் போய் வெந்நீர் வாங்கி மாத்திரையைப் போட்டு வா'' என்று அவளை அனுப்பினார். சிறிது நேரம் கழித்து தம்ளரில் வெந்நீரோடு வந்தாள். ''மாத்திரையைப் போட்டுட்டியா?'' என்றார் ஆசிரியர். ''போட்டுட்டேன்'' என்றாள் அவள். ''மாத்திரையைப் போட்டுட்டா அப்புறம் எதுக்கு தம்ளரில் வெந்நீர்?'' என்று மேலும் கேட்க,

நினைவில் நின்றவை...



"மாத்திரையைத் தம்ளரில் உள்ள வெந்நீருக்குள் போட்டுட்டேன். அடுத்து என்ன ஸார் செய்யணும்?" என்று அவள் அப்பாவி



யாகச் சொல்ல ஆசிரியர் உட்பட எல்லோரும் சிரித்துவிட்டோம்.

- சு. அபிராமி, காயக்காடு


குரோமியம்...

எங்கள் அறிவியல் ஆசிரியர் ஒரு மாணவனிடம், "குரோமியம் எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது?" என்று கேட்டார். தூக்கக் கலக்கத்தில் இருந்த அம்மாணவனின் காதில் 'குரோமியம்' என்பது 'கோமியம்' என விழுந்துவிட்டது போலும்... அவன் எழுந்து நின்று, '"கோமியம் என்பது பசுவின் சிறுநீரிலிருந்து கிடைக்கிறது" என்று கூறியதும் எழுந்த சிரிப்பலையில் பள்ளிக்கூடமே அதிர்ந்தது!

- ஆர். பிரஸன்னா, கரூர்

விளக்கம் என்ன?

அறிவியல் பாடவேளை. ஆசிரியை காற்று பற்றி முன்னுரை கொடுத்துக் கொண்டிருந்தார். ஆக்ஸிஜன், கார்பன்டை ஆக்ஸைடு, நைட்ரஜன் பற்றிச் சொன்னார். எனக்குப் பக்கத்தில் ஒரு மாணவி தூங்கிக் கொண்டிருந்தாள். ஆசிரியை



அதைப் பார்த்துவிட்டார். அவளை எழுப்பி "AIR என்றால் என்ன?" என்று கேட்டார். அதற்கு அந்த மாணவி, "AIR என்பதன் விரிவு ஆல் இண்டியா ரேடியோ" என்றாளே பார்க்கலாம்!

- ச. அபிநயா,
எட்டாம் வகுப்பு, வடலூர்



ஓவியப் போட்டி முடிவுகள்:

சென்ற மாதம் 'கிறிஸ்துமஸ் மரம்' என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.



இரண்டாம் பரிசு :

எம். யுவராஜ், ஒன்பதாம் வகுப்பு, சிவபாக்கியம் முத்துசாமி மெட்ரிக் பள்ளி, மாதேசம்பாளையம்

முதல் பரிசு:

எஸ். பாலமுருகன், ஏழாம் வகுப்பு,
தேசியக் கல்லூரி மேல்நிலைப் பள்ளி,
திருச்சிராப்பள்ளி

கிறிஸ்துமஸ் மரம்!



மூன்றாம் பரிசு:

ஏ. பவித்ரசெல்வி, ஏழாம் வகுப்பு,
டி.எஸ். சாரதா வித்யாலயா
பெ.மே.நி பள்ளி,
கோபிசெட்டிபாளையம்

ஆறுதல் பரிசு:

கோ. காயத்திரி, ஆறாம் வகுப்பு,
வி.கே. செட்டி இந்து வித்யாலயா,
ஆத்தம்பாக்கம்



ஆறுதல் பரிசு:

ஆர். ஸ்ரீ ஹரிணி, ஆறாம் வகுப்பு,
பாரதிய வித்யாபவன் மெட்ரிகுலேஷன்
மேல்நிலைப் பள்ளி, ஈரோடு.





யார் சிறந்தவர்?
கதை: ஜித்தன் ஜேம்ஸ்
படம் : பிள்ளை
அக்பரின் அரசவையில் -
உலகிலேயே சிறந்த மனிதன் யார்?
அரசருக்கு எல்லோரும் ஜால்ரா போடுபவர்களாக இருந்தனர்.
தாங்கள்தான் மிகச் சிறந்தவர் அரசே!
பீர்பால் அமைதியாக இருந்தார்.
பீர்பால், நீ என்ன சொல்றே?
ஒரு குழந்தைகூட தங்களைவிட சிறந்ததாக இருக்க முடியும்!
ரொம்ப நல்ல ஜோக்!
நான் இதை நிரூபிக்கிறேன்
மறுவாரம் பீர்பால் ஒரு அழகான குழந்தையுடன் வந்தார்.
குழந்தை அக்பரிடம் விளையாடியது.
குழந்தைக்கு தண்டனை கொடுங்கள்.
ஒன்றும் அறியாக் குழந்தையைத் தண்டிப்பதா?
அரசரையே கடித்து இழுத்தக் குழந்தைக்குத் தண்டனை தர இயலவில்லை. அப்படியென்றால் இந்தக் குழந்தைதான் உங்களை விடச் சிறந்தது!



SURPRISE ENDING TO SERIAL

XMAS HOLIDAY SPECIAL





YOGA FOR HEALTH

-cover story

DECEMBER 2005 Rs.8/-only

GOKULAM

THE Magazine for Children

For Subscriptions mail to : Gokulam, Kalki Buildings,
47- NP, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai-600 032
E-mail:subscription@kalkiweekly.com



I. அக்டோபர் மாதம் 14-ந் தேதி

II. 1. கொய்யாப்பழம்
கொ - ஒற்றைக்கொம்பு, துணை எழுத்து (ா)
எருது - கொம்பும் இல்லை, காலும் இல்லை.

2. ஒரு கால் - சூரியன், இருகால் - காலைக்கடன், முக்கால் - கையில் பிடிக்கும் கோல், நாற்கால் - தரிசு நிலம், ஐந்துதலை - நெருஞ்சி முள், கடித்தது - குத்தியது.

III. குமாருக்கு 16 முறை வெற்றி. பாலுவுக்கு 10 முறை வெற்றி.
(16x5 = 80, 10x8 = 80)

புதிர் உலகம் விடைகள்



1 நா	ளி	த	ழ்		பு	ம்	ரு	2 க
ற்			மி		ம்			ட்
கா		லை	3 சி		4 வே	ல்		ட
லி	5 வே			6 க			7 க	ளை
			8 மி	த	வை			
ல்	9 ப			வு			10 வே	லை
க		மி	11 உ		12 ம	தி		ம
ங்			ப்		ங்			து
13 செ	ரு	ப்	பு		கை	ங்	ரு	14 மு

IV. 40 ஆப்பிள்கள்

V. 1. லக்னோ
2. லண்டன்
3. லட்சியம்
4. லவாய்சியர்
5. லக்ஸம்பர்க்

10 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடைகள்: 1. பலூன்கள், 2. பையனின் தொப்பி, 3. பெண்ணின் சடை, 4. நாயின் நாக்கு, 5. பையனின் ஷூ, 6. மணி, 7. கிறிஸ்துமஸ் தாத்தா குல்லா, 8. பெண்ணின் டை, 9. ரோலர் ஸ்கேட்டிங் வீல், 10. நாயின் வால்

சுற்றுச் சூழலைக் காப்போம்!



ஸ்நேகாவும் ரிஷியும் பிரகாஷ் அங்கிள் வீட்டுக்குச் சென்றனர்.

''வாங்க... வாங்க... ஏதாவது சாப்பிடறீங்களா?'' என்று அன்புடன் விசாரித்தார் அங்கிள்.

''ஒண்ணும் வேண்டாம். எங்களுக்கு நீங்க கொஞ்சம் உதவி பண்ணணும்'' - ரிஷி

''என்ன சொல்லுங்க?''

''எங்க பள்ளியில் சுற்றுச் சூழல் விழா நடத்தறாங்க. நான் கட்டுரைப் போட்டியில் கலந்துக்கறேன். ஸ்நேகா பேச்சுப் போட்டியில் கலந்துக்கறாள். நீங்க சுற்றுச் சூழல் பற்றி தகவல்கள் கொடுக்கணும் அங்கிள்'' என்றான் ரிஷி.

''சுற்றுச் சூழலை நாம் பல விதங்களில் மாசு படுத்தறோம். நீங்ககூட அதைப் பண்ணறீங்க.''

''நாங்களா?'' என்றாள் ஸ்நேகா வியப்புடன்.

''ஆமாம். நீங்க ரெண்டு பேரும் விளையாடற வீடியோ கேம்ல பேட்டரி போடறீங்க. பேட்டரியில் லீட் இருக்கிறது. நம்ம நாட்டில் பேட்டரியை முறையாக அப்புறப் படுத்துவதில்லை. எனவே இந்த லீட் மண்ணில் அழியாமல் இருக்கும். இதனால் சின்னஞ்சிறு உயிரிகள் பாதிக்கப்படுகின்றன. அது தவிர நீங்கள் டெட்ராபேக்கில் வரும் ஜூஸ்களை வாங்கிக் குடிக்கிறீர்கள். இந்த டெட்ரா பேக்கின் மேல் காகிதமும் உள்ளே அலுமினியமும் இருக்கிறது. இந்த அலுமினியம் மட்காமல் அப்படியே மண்ணில் இருக்கும்.''

''புரியுது அங்கிள். இனி நாங்கள் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்படுத்தும் பொருட்களை தவிர்ப்போம்'' என்றனர் ரிஷியும் ஸ்நேகாவும்.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 * Registered as a Newspaper in Srilank